1323

REGISTERED No. M. 6165. ந. பை. 13

# பத்ஹுல் இஸ்லாம்

# FATH-HUL-ISLAM

OFFICE OF THE REGISTRAR OF BOOKS
30 DEC 1957
MADRAS

மாத பத்திரிகை
ஜனவரி—1958.

விஷயம். பக்கம்.

உண்ணலும் பருகலும் உயிர் வாழ்வதற்கே ... 1

என் காற்றாடி உன் வீட்டில் விழுந்ததா?
(டி. எப். ஆர். மஆலி சாஹிப்-பாகவி) சிறுவர் பகுதி 8

முஸ்லிம் மன்னரின் ஹிந்து ராணிகள்
(டி. எப். ஆர். மஆலி ஸாஹிபு-பாகவி) ... ... 11

மவ்லானா மதனீ ஸாஹிப்-மர்ஹூம்
(ரஹ்மத் பாகவி) ... ... ... ... ... ... ... 15

திருக்குர்ஆன் சாரசங்கிரஹம்
(ரஹ்மத் பாகவி) ... ... ... ... ... ... ... 17

சிறைப் பறவை சிப்கத்துல்லா அல்லது
துப்பு துலக்கிய தூயவர் ... ... ... ... ... 21

...கிலும் மறக்க முடியாத மாவீரர் ... ... ... 30

...இஸ்லாம் ஆபீஸ் :
...ரோட், திருவல்லிக்கேணி,
மதராஸ் 5.

3L
Q7mV211,N24F1
N58.
187070

# பத்ஹுல் இஸ்லாம்.

சந்தா விபரம்: இந்தியா, பாகிஸ்தான், ஸிலோனுக்கு
வருஷ சந்தா ரூ. 1–50
தனிப் பிரதி நயா பைஸா. 13
மற்ற வெளி நாடுகளுக்கு வருஷ சந்தா ரூ. 2–00

எல்லா ஊர்களிலும் ஏஜெண்டுகள் தேவை. எல்லா விஷயங்களுக்கும் கீழ்கண்ட விலாசத்திற்கு எழுதவும்.

மானேஜர்,
பத்ஹுல் இஸ்லாம்,
20, ஹைரோட், திருவல்லிக்கேணி, மதராஸ் 5.

# நபிகள் நாயகம் (ஸல்) அவர்களும் குர்ஆனின் நல்லுபதேசமும்.

(முதல் பதிப்பு)

இதில் நமது நாயகம் முஹம்மது (ஸல்) அவர்கள் அவதரித்தது முதல், வபாத்து வரை சுருக்கமாக விபரித்து எழுதப்பட்டுள்ளது. இத்துடன் நாயகம் (ஸல்) அவர்கள் தமது உம்மத்துமார்களுக்கு மொழிந்தருளிய உபதேசங்களும், குவலயத்தோர்க்கு குர்ஆன் ஷரீப் கூறும் செய்திகளுள் சிலதும் சேர்க்கப்பட்டுள்ளன. 115 பக்கங்கள் கொண்டது.

விலை ரூ. 1–00

கிடைக்குமிடம் :—

ஹாஜி எம். எ. ஷாஹுல் ஹமீது அண்டு ஸன்ஸ்,
நெ. 20, ஹைரோட், திருவல்லிக்கேணி, மதராஸ் 5.

# பத்ஹுல் இஸ்லாம்

ஜனவரி—1958.

## உண்ணலும் பருகலும் உயிர் வாழ்வதற்கே

"குலூ, வஷ்ரபூ, வலா துஸ்ரிபூ"

'உண்ணுங்கள், பருகுங்கள், வீண் விரயம் செய்யாதிர்கள்' என்பது திருக்குர்ஆனில், அல்லாஹு தஆலா திருவுளமான திருக் கட்டளையாகும்.

சிருஷ்டிகளிலெல்லாம் மிகச்சிறந்த இனமாகிய மனிதன் முதல், சிருஷ்டிகளிலே மிகச் சிறியதாகிய ஈ கொசு வரை, மேற்காணும் கட்டளையை அனுஷ்டித்து நடந்து வருகின்றன. மனிதன் இயற்கை யாக வாழ்ந்த ஆதி காலத்திலும், செயற்கையாக வாழும் இந்த நவீன காலத்திலும், தனக்கு வேண்டிய உணவு பான வகை யாதென்பதை அவன் ஐயமறத் தேர்ந்தெடுத்துக் கொள்கிறான்.

மனிதன் எதைத் தின்பது, எதைத் தின்னாதிருப்பது என்பது நாட்டுப் பழக்கத்தையும் சீதோஷ்ணத் தன்மையையும் சூழ்நிலையையும் சமய சந்தர்ப்பத்தையும் பொறுத்ததா யிருந்து வருகிறது. ஒரு சிறிய ஈ எறும்பைக் கூட "நீ இதைத்தான் தின்ன வேண்டும், இதைத் தின்னக் கூடாது" என்று யாரும் எவரும் கட்டுப்படுத்த முடியாது. அப்படி நாம் ஒரு உயிர்ப் பிராணியை, அதன் இயற்கைக்கும் இச்

சைக்கும் விரோதமாக, அது வேண்டாத வேறு வகை உணவுப் பண்டத்தை தின்னக் கொடுத்துப் பலவந்தம் செய்வோமாயின், அது சின்னாளில் மாண்டு மடிந்துதான் போகுமே யல்லாது, சுக சௌக்கிய மாய் உயிர்வாழ மாட்டாது.

இந்த நியதியை உயிர் பிராணிகள் மட்டுமல்ல, தாவர வர்க்கங் களிலும் காணலாம். மழையில்லாத நாட்டின் கரடு முரடான பூமியில் விளையும் செடியைக் கொண்டுபோய், சதாகாலமும் மழையும் பனியு மாய் பெய்து கொண்டிருக்கும் சீதள நாட்டின் பூமியில் நட்டு வளர்த் தால் வளருமா? நோய் கண்டு அழுகி நாசமாய்ப் போகும். அதே மாதிரி, பனிமலை நாட்டில் பயிராகும் ஏலக்காய், தேயிலைச் செடிகளை, அரபு நாட்டுப் பாலைவனத்தில் நட்டுவைத்து வளர்த்தால் வளருமா? அவையும் வாடி வதங்கிக் கருகிப் போய்விடு மென்பது நிச்சயம்.

உதாரணமாக: நம்மவர் வீட்டில் ஆடு, மாடு, பசுக்களும், நாய் பூனை, எலிகளும் வளர்கின்றன. கிளி, மைனா பட்சிகளும் வளர் கின்றன. இவைகளின் உயிர்வாழுந் தன்மைகளும், ஆகார பான வகைகளும் வெவ்வேறானவைகளாகும்.

ஆடு மாடு முதலிய பசுவினம் புல்லையும், தவிட்டையும், கீரையை யும், தழைகளையும் ஆகாரமாய் உட்கொண்டு உயிர் வாழுகின்றன. நாயும் பூனையும், கிடைப்பதைத் தின்றுவிட்டு எங்கேனும் மாமிச எலும்பு கிடைக்குமா, எலி மீன் முதலிய பண்டங்கள் கிடைக்குமா என்று தேடியலைகின்றன. அவை தத்தம் இயற்கையின் பிரகாரமே உண்டு பருகி, இனிது உயிர் வாழ்கின்றன. அவற்றைப் பிடித்துப் பலவந்த மாக ஓரிடத்தில் அடைத்து, அவை ஆசையுடன் உண்ணாத பருகாத உணவு பான வகைகளை அவைகளுக்கு ஊட்டி நிர்ப்பந்தித்தால் அவை சின்னாளில் உடல் வளர்ச்சிக் கெட்டு நோயுற்று செத்துத் தான் போகும்.

இதே ரீதியில்தான், எல்லா அறிவுகளும் சகல ஆற்றல்களும் சகல சௌபாக்கியங்களும் பெற்ற மனிதனும், இயற்கை தர்ம முறைப் படி உண்டு பருகி உறங்கி உழைத்து உயிர்வாழ்ந்து வருகின்றான்.

இப்படிப்பட்ட நிலைமை இன்று நேற்றல்ல, உலகில் ஆதி மனிதர் பிதா நபி ஆதம் (அலை) அவர்களும் அவரது துணைவியாகிய அன்னை ஹவ்வாவும் தோன்றிய காலந்தொட்டு நிலைத்திருந்து நிகழ்ந்து வரு கின்றது. அந்த ஆதி மனிதரும், ஆதி மனுஷியும் எதை உண்பது

18070

எதை உண்ணுதிருப்பது என்பதை, தம் அறிவைக் கொண்டும் அனுபவத்தைக் கொண்டும் தெரிந்தெடுத்துக் கொண்டு அனுஷ்டித்து வந்தார்கள்.

அந்த ஆதி மனிதரின் வழிவழியே வந்த இக்காலத்து மனிதர் சமூகமாகிய நாமும், அதே முறையில்தான் உண்டு பருகி உறங்கி சுகித்து வாழவேண்டு மென்று, எல்லாம் வல்ல இறைவன் நமக்கு ஆக்ஞாபித் திருக்கின்றான். ஆண்டவன் ஆக்ஞைக்கு இணங்கி, இயற்கையோடு இயைந்த வாழ்க்கை வாழ்வது, மனிதனுடைய இயற்கைக் கடமையாகும்.

ஒரு சமூகத்தார் இயற்கைத் தன்மையோடு வாழ்ந்து வந்தால், அவர்கள் சுக சௌக்கியமாயும் வீர தீரமாகவும் திடகாத்திர தேகிகளாகவும் இருந்து வருவார்கள். அங்ஙனமின்றி, அன்னோர் 'நாங்கள் அதைத் தின்னமாட்டோம், இதைத் தொடமாட்டோம், இப்படித்தான் வசிப்போம், அப்படியெல்லாம் உழைக்கமாட்டோம்' என்றெல்லாம் விதண்டாவாதம் புரிந்துகொண்டு, உலக வாழ்வுக்கு ஒவ்வாத முறைகளில், மனம் போன போக்கில் வாழ்ந்து வந்தால், அவர்களுடைய உலக வாழ்வு இயற்கையாய் இல்லாமல், செயற்கையின் வசப்பட்டு நலிந்து நைந்துதான் போகுமென்பதில் சந்தேகமில்லை.

இப்போது இந்த நவீன நாகரிக காலத்தில், மனிதனே இல்லாத ஆகாய விமானம் செலுத்தப்படும் இந்நாளில், ஆகாய மண்டலத்தைக் கிழித்துக் கொண்டு வான மண்டலத்தையும் தாண்டி ககன கோளங்களை யணுகிச் செல்லும் ராக்கெட் சகிதமான ஸ்பூட்னிக் என்னும் செயற்கைச் சந்திரன்கள் பறக்க விடப்படும் இந்நாளில், சில சாது மனிதர்கள் கூடி "மனிதன் கீரைக் கிழங்குகளையும், தானிய வகைகளையும்தான் உண்ண வேண்டும்; மாமிசத்தைத் தொட்டுக்கூட பார்க்கலாகாது, கண்ணால்கூட காணலாகாது" என்று ஆங்காங்கு மகாநாடுகள் கூடிப் பிரசாரம் செய்து வருகிறார்கள். அந்தோ!

மனிதன் எதை உண்பது நலம், எதை உண்பது தீது என்பது அவனவன் இஷ்டத்தையும், அவனவன் உடலின் ஆரோக்கியத் தன்மையையும், நாட்டு சீதோஷ்ண சூழ்நிலையையும் பொருத்ததாகும். 'நீ இதைத்தான் உண்ணவேண்டும், இதையெல்லாம் உண்ணக் கூடாது' என்று இந்த நவீன நாகரிக காலத்தில் சொல்வது ஒரு போதும் பிரயோஜனப் படமாட்டா தென்பது திண்ணம்.

சென்ற மாதம் நம் சென்னைமா நகரின்கண் 'அகில உலக மரக் கறி உண்போர் மகாநாடு' என்ற பெயரால் ஒரு மகாநாடே நடந்து முடிந்ததென்பதை, பார்த்த நண்பர்களும் பத்திரிகைச் செய்தி படிக்கும் அன்பர்களும் அறிவார்கள். அவர்கள் தத்தம் பணத்தைச் செல விட்டு, நேரத்தைப் போக்கி எத்தகைய பேச்சுகளை வேண்டுமானாலும் பேசிக் கொண்டே போகட்டும். அதைப்பற்றி நமக்கு ஆக்ஷேபணை இல்லை. ஆனால் 'காய் கிழங்கு கீரை வகைகளையும், அரிசி கோதுமை தானிய வகைகளையும் மட்டும்தான் உலக மக்களெல்லோரும் உண்ண வேண்டும், இதனூடே மாமிசம் என்னும் ஊன் கறியை உண்ணக் கூடாது, இது மகா பாபம்' என்று பிரசாரம் செய்வதுதான் புத்திக்கும் யுக்திக்கும் நேர்மைக்கும் காலத்துக்கும் பொருத்தமானதாய் இல்லை.

'மரக்கறி உண்போர் மகாநாடு' என்று அவர்கள் தங்கள் கூட்டத் துக்கு பெயர் வைத்துக் கொண்டார்களே அது ஏன் என்று புரியவில்லை. கறி உண்போர் என்றால் யார்? 'கறி' என்றால் என்ன? 'கரி' என்றால் எரிபொருளாகிய அடுப்புக்கரி, நிலக்கரி முதலியனவாகும். கறி என்றால் மாமிசக்கறி, தாவரக்கறி என்று இரண்டு வகைப்படும். உருளைக் கிழங்கு, வாழைக் காய், வாழைத் தண்டு, கோசு முட்டை, முள்ளங்கி, முருங்கக்காய், கத்தரிக்காய், சேப்பங் கிழங்கு, மொச்சைக் காய், அவரைக் காய், புடலங் காய், பூசணிக்காய் முதலியவைகளை அவர்கள் 'மரக்கறி' என்று சொல்லுகிறார்கள். இந்தவகைக் கறி உண்டாகும் செடி கொடி மரங்களுக்கு 'உயிர்' இல்லையாம்; ஆகையால் இவற்றை கத்தியினால் வெட்டி, கீறி, அறுத்து, நறுக்கி, சுட்டு, வேக வைத்து, ஆக்கி, சுவைத்துத் தின்னலாமாம்; ஆனால் ஆடு, மாடு, கோழி, முயல், மான் முதலியவைகளின் உடலிலிருந்து கிடைக்கும் 'கறி' யை தின்னக் கூடாதாம், இது மகா பாபமாம்! பாபம்!!

சோதரீர்! பாபம் எது, புண்ணியம் எது என்பதை எப்படி நாம் பகுத்தறிவது? யார் சொல்வதை கட்டளையாக ஏற்பது? இயற்கையாய் வளரும் செடி கொடிகளை வெட்டி எறிவது பாபமில்லையாம். மரத்தி லிருந்து கனிகளையும் கிளைகளையும் வெட்டி எறிவது பாபமில்லையாம். உருளைக் கிழங்கையும் வேறு கிழங்கு வகைகளையும், பூமியாகிய அதன் தாயின் மடியிலிருந்து வெட்டிப் பறித்து அப்புறப்படுத்தி சிதைத்துச் சின்ன பின்னமாக்கி வதக்கிப் பொசுக்கி சமைத்து உண்பது பாபமில்லை யாம். காரணம்-அதற்கு உயிர் இல்லையாம், அது கத்துவது இல்லை யாம், கதறுவது கிடையாதாம், எழுந்து ஓடமாட்டாதாம்.

செடி, கொடி, மரங்கள் வளர்ந்து ஓங்கிப் பெருகி மலிகின்றனவே, அது உயிர் வாழ்வு இல்லையா? கல்போல் அவை போட்டது போட்டபடியே ஆகவாகிடக்கின்றன? ஒரு சிறு விதையைத் தரையில் நட்டு தண்ணீர் ஊற்றிப் பாருங்கள். அது மறுநாள் முளைவிட்டு தலை நீட்டி வளரத் தொடங்கி விடுகிறது; அதை கிள்ளாமல் ஒடிக்காமல் விட்டு விட்டால், அது ஓங்கி வளர்ந்து அடர்ந்த மரமாகவும் ஆய்விடுகிறது. இது உயிர் வாழ்வு இல்லையா? மொச்சைக் கொட்டையையோ, பூஷனி விதையையோ, அவரையையோ நட்டு நீர் ஊற்றிக் காத்திருங்கள். அழகான முளைவிட்டு கொடிபடர்ந்து, நாலு பக்கமும் பரவி, கை நீட்டிக் காலூன்றிச் செல்கின்றனவே; இது உயிர் வாழ்வு இல்லையா? கொடிகள், கொழுகொம்பையும் மரக்கிளையையும், குழந்தைகள் பெற்றேர் உற்ருர் கரத்தை பற்றிப் பிடித்துக் கொள்வது போல்—பற்றிக் கொள்கின்றனவே, இது உயிர் வாழ்வு முறை இல்லையா?

ஸர்-ஜகதீஸ் சந்திரபோஸ் என்ற ஒரு அறிவாளி இருந்தார். தாவர சாஸ்திரத்திலும், விஞ்ஞானத்திலும் மகா மேதாவி என்று பெயர் பெற்றிருந்தார். அப்பேரறிஞர் உலகப் புகழ் பெற்ற மாபெரும் இந்திய விஞ்ஞானி என்று, பாரத சமுதாயம் அவரைப் பாராட்டுகிறது. அப்படிப்பட்டவர் என்ன சொல்கிருர் தெரியுமா? "மரஞ் செடிகொடிகளுக்கும் உயிர் உண்டு; சுவாச முண்டு; ஆகார முண்டு; இரவு—பகல் உண்டு; சுக—துக்கம் உண்டு" என்று சொல்கிருர். சொல்வது மட்டுமில்லை. நிரூபித்தும் காட்டுகிருர்.

ஒரு செடியை மரத்தை வெட்டிச் சிதைப்பதற்கும், ஒரு ஆட்டை அல்லது மனிதனை வெட்டிச் சிதைப்பதற்கும் அதிகம் வித்தியாச மில்லை என்று அறிவாளிகள் கூறுகின்றனர்; பூசனிக்காயை பெரும் கத்தியால் ஒரு போடு போட்டு வெட்டிப் பாருங்கள்; மாரியம்மன் கோவிலில் பூசையிடப்பட்ட ஆட்டுக் கழுத்தை அந்தப் பூசாரி, கோடரியால் ஒரே வெட்டு வெட்டி துண்டாக்கும் போது உண்டாவது போன்ற 'சப்தம்' உண்டாகிறதா, இல்லையா? பாருங்கள். மாமிசத் துண்டை நறுக்கும்போது உண்டாகும் சப்தத்துக்கும், உருளைக் கிழங்கை அல்லது புடலங்காயை நறுக்கும்போது உண்டாகும் சப்தத்துக்கும் அதிகம் வித்தியாசம் கிடையாது. எனவே எது பாபம், எது புண்ணியம் என்பதை மனிதன் அறியான்; எல்லாம் வல்ல ஆண்டவனே அறிவான்.

'அஹிம்சா தர்மம்' என்றும் 'ஜீவஹிம்சை' என்றும் இக்காலே சில பேர், வாய் வேதாந்தம் பேசி, மாமிசம் உண்போரை ஏளனம் செய்து வருகிறுர்கள். ஏழையிடம் வட்டிக்குப் பணத்தைக் கொடுத்து விட்டு, இரட்டிப்புத் தொகைக்கு எழுதி வைத்துக் கொண்டு, வம்பும் வழக்கும் செய்து எளியோரை உயிருடன் வதைக்கிறுர்களே, இது ஜீவஹிம்சை இல்லையா? நல்ல குடிவாழ்வை சீரழிக்கிறுர்களே, இது ஜீவஹிம்சை யில்லையா? அரசியல் போராட்டம் என்றும், சட்டம் அமைதி பாதுகாப்பு என்றும், தற்காப்பு என்றும் சொல்லிக்கொண்டு, துப்பாக்கிப் பிரயோகமும், குண்டு பிரயோகமும், வெடி—விஷவாயுப் பிரயோகமும் செய்கிறுர்களே இது ஜீவஹிம்சை யில்லையா? 'அணு குண்டு' வீசி, ஜனசமூகத்தையே அடியோடு நசுக்கிப் பொசுக்கி அழித்து ஒழிக்கிறுர்களே இது ஜீவஹிம்சை யில்லையா? ஒரு கண்டத்தி லிருந்து இன்னெரு கண்டத்துக்கு 'ஹைட்ரஜன்' குண்டை ராக்கட் மூலம் அனுப்பி, உலகை அழிக்க எங்களால் முடியும் என்று சபதம் செய்கிறுர்களே, இது ஜீவஹிம்சை இல்லையா?

"இந்தியாவிலிருந்து 1953-ல் 20,000 குரங்குகள் ஏற்றுமதி செய்யப்பட்டன. இது இப்போது 2-இலக்ஷத்துக்கு, தொகை உயர்ந்து போயிருக்கிறது" என்ற செய்தியை பத்திரிகையில் படித்தோம். எதற்கு இது? மேனுட்டு (அமெரிக்க—பிரிட்டிஷ்—ஜெர்மனி) டாக்டர்கள், உலகப் பணக்காரர்களின் பேடித்தன்மையைப் போக்கி ஆண்மையை உண்டாக்குவதற்கு, குரங்குகளின் உடலேக்கீறி ஜீவ நரம்பை எடுத்து மருந்து செய்கிறுர்களாம். லக்ஷக்கணக்கான இந்திய குரங்குகளே (ராமதூதன்)களை ஏற்றுமதி செய்வதற்கு, நம் பாரத நாட்டு அரசினர் அனுமதி யளிக்கின்றனரே, இது ஜீவஹிம்சை யில்லையா! ஓஹோ, அஹிம்சா தர்மம் போலும்!

சோதரீர்! பிறர் நடத்தையை, பிறர் சொற்களே குறை கூறுவது நமது நோக்க மில்லே. மனித சமூகத்துக்கு ஏற்ற உணவு எது என்று முடிவு செய்வது, "மாமிசம் உண்டால் குடல் ஜீரணமாகாத பலஹீனர்கள் உடைய வேலேயல்ல! மாமிசம் புசிக்க தேகதிடம் இல்லாதவர்கள், குடல் பலம் இல்லாதவர்கள், மனசாக்ஷி யில்லாதவர்கள்—உண்ணுமல் இருக்கட்டும். அதற்காக மாமிசம் உண்போரை, 'புலால் உண்ணும் நீசன்' என்று கூறவேண்டாம்.

அமெரிக்கர், ரஷியர், பிரித்தானியர், அரபியர், மற்றும் எல்லா நாட்டினருந் தான், தாராளமாக மாமிச உணவை, நித்திய ஆகாரப் பண்டமாய் உபயோகித்து வருகிறார்கள். இதனால் அவர்கள் அறிவில் குறைந்து விட்டார்களா? ஆற்றலில் குறைந்து விட்டார்களா? அரசாளும் தன்மையில் குறைந்து விட்டார்களா?

'குலூ, வஷ்ரபு, வலா துஸ்ரிபூ'—"நீங்கள் இஷ்டப்பட்டதை உண்ணுங்கள், பருகுங்கள்; ஆனால், எதிலும் வரம்பைக் கடந்து போகாதீர்கள்" என்பதே இஸ்லாத்தின் போதனை. இதில் எல்லா தத்துவங்களும் அடங்கி யிருக்கின்றன; அன்பர்களே, ஓர்ந்து பாருங்கள். வஸ்ஸலாம்.


# முதல்லல் கோஷா நாமா

கோஷா பர்தா விஷயத்தைப் பற்றி ஹக் தஆலாவின் கலாமாகிய தலீல்களிலும் நமது நபி நாயகமவர்களின் திரு மொழியாகிய ஹதீதுகளிலும் வந்திருப்பவைகளைக் கல்விக் கடல்களாகிய முஹத்திஸின்களும், முபஸ்ஸரீன்களும், முஜ்தஹிதீன்களும் தெண்டித்து விபரித் தெழுதி யிருப்பவைகளில் சிலதை சுருக்கமாக சேகரித் தெழுதி முதல்லல் கோஷா நாமா வென்று பெயர் வைத்து தற்கால ஆலிம் மவ்லவிகளில் மஹான்களாகிய பத்து உலமாக்கள் பார்வையிட்டு அச்சிடப் பட்டது. இவைகளெல்லாம் வசனமாகக் கூறப்பட்டு இருக்கின்றன.

பின்பு இவைகளெல்லாம் சுலபமாக மனதில் வைத்துக் கொள்ளும் பொருட்டு பாடல்களாக போடப்பட்டு இருக்கின்றன.

இதன் விலை ரூ. 0 – 52

ஷை அறபுத் தமிழ் விலை ரூ. 0 – 80

கிடைக்குமிடம் :—

ஹாஜி எம். எ. ஷாஹுல் ஹமீது அண்டு ஸன்ஸ்
நெ. 20, ஹைரோட், திருவல்லிக்கேணி, மதராஸ் 5.




# என் காற்றாடி உன் வீட்டில் விழுந்ததா?

டி. எப். ஆர். மஆலி சாஹிப் (பாகவி)

## காற்றாடிச் சண்டை

ராமன் என்ற பையன், ஒரு காற்றாடி விட்டான். அது மிக உயரத்தில் பறந்தது. அதை கிருஷ்ணன், சோமன், பீமன், காமன் முதலிய எல்லாச் சிறுவர்களும் வேடிக்கை பார்த்துக் கொண்டிருந்தனர்.

ஆகாயத்தில் காற்றாடி விடுவதில் ராமன் கெட்டிக்காரன். எல்லோரும் அவனுடைய சாமர்த்தியத்தைப் பார்த்துப் புகழ்ந்துகொண்டிருந்தனர்.

கிருஷ்ணன் பணக்காரப் பையன். ஆனால் இவனுக்கு காற்றாடி விடத் தெரிய வில்லை. இவன் காற்றாடி விட்டாலும், அது உயரத்தில் பறப்பதில்லை. கொஞ்ச உயரத்தில் போய் 'கிருக்கி' அடித்துக் கொண்டு, வாலை சுழற்றிக் கொண்டு, கீழே வந்து விழுந்து விடும். ஆகையால், கிருஷ்ணனுக்கு ராமன் மீது கொஞ்சம் மனஸ்தாபம் உண்டு. ஆனால் சண்டை போடத் தைரியமில்லை.

ராமன் விட்ட காற்றாடி, மிக மிக உயரத்தில் போய் விட்டது; கண்ணுக் கெட்டாத தூரம் வரை போய் விட்டது. திடீரென்று, ராமன் காற்றாடியின் 'மாஞ்சா' நூல் அறுந்து விட்டது. அது எங்கே போய் விழுந்ததென்று சரியாகத் தெரிய வில்லை.

நூல் அறுந்துப் போன காற்றாடி எங்கே யாவது போய் விழுந்துத்தானே ஆக வேண்டும்! ஆகவே ராமன், யோசனை செய்து பார்த்தான்; ஆகாயத்தை அண்ணாந்து நோக்கினான். காற்று எந்த திசையில் அடித்தது என்பதையும் ஒருவாறு அனுமானித்துக் கொண்டான்.

ஏழை ராமனுக்குப் பணக்கார கிருஷ்ணன் மீது, பழைய மனஸ்தாபம் கொஞ்சம் உண்டு. அதை இந்த சமயத்தில் பயன் படுத்திக் கொள்ள வேண்டு மென்று தீர்மானித்துக் கொண்டான்.

உடனே ராமன், வலிய போய், கிருஷ்ணனின் கையைப் பிடித்துக் கொண்டான்.

**ராமன்:**—அடே கிருஷ்ணு! என் காற்றாடியைக் கொடு.

**கிருஷ்ணன்:**—உன் காற்றாடி என்னிடம் ஏது? நீ என்னிடம் கொடுத்தா வைத்திருந்தாய்? இல்லையே!

**ராமன்:**—சற்று முன் நான் ஆகாயத்தில் பறக்க விட்டுக் கொண்டிருந்தேனே, அது உங்க வீட்டில் தான் போய் விழுந்து விட்டது.

**கிருஷ்ணன்:**—உன் காற்றாடி என் வீட்டில் வந்து விழுந்ததென்று உனக்கு எப்படித் தெரியும்? சாக்ஷி யார்? நீ பார்த்தாயா?

**ராமன்:**—சாக்ஷியா வேண்டும், இதற்கு? என் காற்றாடி உங்க வீட்டுப் பக்கம் தான் பறந்து கொண்டிருந்தது; காற்றும் அந்த பக்கம் தான் அடித்துக் கொண்டிருந்தது. என் அறுந்து போன காற்றாடி, உன் வீட்டுக் 'காம் பவுண்டில்' தான் விழுந்தது என்று நான் சொல்கிறேன். நீ என் காற்றாடியைக் கொடுத்து விடு; இது தான் தர்ம நியாயம்.

**கிருஷ்ணன்:**—இதென்ன தர்ம சங்கடம்! உன் காற்றாடி பறந்ததை, எல்லாப் பையன்களும் வேடிக்கை பார்த்துக் கொண்டிருந்ததைப் போல் தான், நானும் பார்த்துக் கொண்டிருந்தேன்.

**ராமன்:**—அதெல்லாம் எனக்குத் தெரியாது; அது உங்க வீட்டில் தான்—உங்க பங்களா காம்பவுண்டில் தான் விழுந்திருக்க வேண்டும். கொண்டு வந்து கொடுத்து விடு, மரியாதையாக.

**கிருஷ்ணன்:**—இரு; அவசரப் படாதே. போய் விசாரித்துப் பார்க்கிறேன். என் வீட்டில் யாராவது கண்டு எடுத்திருந்தால், வாங்கி வந்து கொடுக்கிறேன். இல்லா விட்டால் தர முடியாது.

**ராமன்:**—தர முடியாது என்ரு சொல்கிறாய்? பார், நான் உன்னை என்ன செய்கிறேன் என்று......

## ரஷ்ய ராக்கெட் அமெரிக்காவில் விழுந்ததாம்

சென்ற மாதம் ரஷ்ய விஞ்ஞானிகள், செயற்கைச் சந்திரனை, ராக்கெட் எனும் அணு விமானக் கருவியில் வைத்து, வானவளியில் ஆயிரம் மைல்களுக் கப்பால் அனுப்பினார்களல்லவா? அதனைத் தூக்கிச் சென்ற 'ராக்கெட்'டும், செயற்கை சந்திரனைப் போல் சற்று தாழ்வாக பூமியைச் சுற்றி வந்து கொண்டிருந்த தென்று சொன்னார்களல்லவா?

அந்த ராக்கெட் கருவி (இரும்புக் கூடு), அமெரிக்காவைச் சேர்ந்த அலாஸ்கா என்ற பிரதேசத்தில் விழுந்து விட்டதாக,

ரஷ்ய விஞ்ஞானிகள், 'சயின்ஸ் முறையில், கணக்குப் பார்த்துக் கணித்துச் சொல்கிறார்கள்.

எனவே ரஷ்யாவின் ஜனாதிபதி குருஷேவ், அமெரிக்க ஜனாதிபதியான ஐஸன்ஹவருக்கு கடிதம் எழுதிக் கேட்கிறார்:—

"நாங்கள் எங்கள் விஞ்ஞானத் திறமையால் ஆகாய வளியில் பறக்கவிட்ட இரண்டு செயற்கைச் சந்திரன்களில், முதலாவது சந்திர உருண்டையை தூக்கிச் சென்ற ராக்கெட்டின் ஒரு பகுதி, கொஞ்ச நாள் ஆகாயத்தில் பூமியை வட்டமாக சுற்றிக் கொண்டிருந்து, இப்போது கீழே தாழ்ந்து வந்து, பூமியின் ஆகர்ஷண சக்தியினால் இழுக்கப்பட்டு, பூ உலகத்தில் அதாவது உங்கள் அமெரிக்க ஐக்கிய நாட்டைச் சேர்ந்த அலாஸ்காவில் விழுந்துவிட்டது. தயவு செய்து விசாரித்து, கண்டவர்களிட மிருந்து வாங்கி, எங்களிடம் (எங்கள் ரஷ்யஸ்தானிகரிடம்) ஒப்படைத்து விடுங்கள். இது தர்ம நியாயமும் பெருந்தன்மையும் ஆகும். இவ்வாறே உங்கள் செயற்கைச் சந்திரனின் உருண்டையோ, ராக்கேட்டோ எதுவோ, எங்கள் ரஷ்ய பூமியில் விழுந்திருந்தால், உடனே நாங்கள் சுயமே உங்களிடம் கொடுத்திருப்போம்."

இதுதான் ரஷ்ய அதிபரின் கருத்துரை. இதற்கு அந்த அமெரிக்க நாட்டு அதிபரும், பெருந்தன்மையோடு பதில் அளித்துள்ளார். அதாவது:—

"இதுவரை எங்கள் பிரதேச வேவுகாரர்களிட மிருந்தோ, போலீஸ் இலாக்காகளிட மிருந்தோ, காட்டு வன இலாக்கா அதிகாரிகளிட மிருந்தோ, அப்படிப்பட்ட 'ராக்கெட்' (இரும்பு சாமான்), ஆகாயத்திலிருந்து வந்து விழுந்ததாகத் தகவல் வரவில்லை. ஆகையால், நாங்கள் இயலாதவர்களா யிருக்கிறோம்" என்பது பதில் கருத்துரை.

## படிப்பினையா — பரிதாபமா?

இது எதைப்போ லிருக்கிறது. ராமனும் கிருஷ்ணனும் காற்றூடிச் சண்டை போட்டுக் கொண்ட கதைபோ லிருக்கிற தல்லவா? இது பெரிய இடத்துப் பேச்சு.

[அமெரிக்க விஞ்ஞானிகள், சின்ன உருவத்தில் செயற்கை சந்திரனை வானத்தில் வீசி எறிய முயன்று பன்முறை தோல்வியுற்றனர். இந்த நிலையில் "நாங்கள் வெற்றிகரமாய் பறக்கவிட்ட செயற்கைச் சந்திரனின் வீழ்ந்த ராக்கெட்டை திரும்பக் கொடுங்கள்" என்று கேட்பது, வெந்த புண்ணில் வேல் கொண்டு குத்துவதுபோ லிருக்கிற தல்லவா? அந்தோ பரிதாபம்!]

# முஸ்லிம் மன்னரின் ஹிந்து ராணிகள்

டி. எப். ஆர். மஆலி சாஹிப் (பாகவி)

(3)

## ராணி ஜோதாபாய்

இந்திய முகலாய காலத்துச் சரித்திரத்தில், 'ராணி ஜோதாபாய்' என்ற பெயர் குறிப்பிடத் தக்கதாய் விளங்கி வருகிறது. இப்பெண் மணிக்கு 'வாழ்க்கைத் தலைவராய்' (கணவனாய்) வாய்க்கும் பெருமை, முகலாய முஸ்லிம் மன்னர் 'ஜஹாங்கிருக்கு' கிடைத்தது.

நூர்ஜஹான் என்ற பிரசித்திப்பெற்ற முஸ்லிம் அரசி (மலிக்கா) யின் கணவர் ஜஹாங்கீர் (ஸலீம்) தான், ராணி ஜோதாபாயின் கற்புக்கும் அரசராய் விளங்கினர்.

## மகாராஜா உதய்சிங்

அக்காலத்தில் ஜோத்பூரை ஆண்டு கொண்டிருந்த மகாராஜா உதய்சிங் என்ற வேந்தருக்கு ஒரு புத்திரி இருந்தாள். தந்தையின் கண்மணிபோல் விளங்கி வந்தாள். மகளை மகாராஜா உதயசிங், அதிகம் நேசித்து வந்ததால், அப்பெண்மணியை கட்டுப்பாட்டில் வைக்கவில்லை. தன் மகள் ஜோதாபாய் எதைக் கேட்டாலும், தந்தை இல்லை என்று சொல்லமாட்டார், எங்கு சென்றாலும் ஏன் சென்றாய் என்று கேட்கமாட்டார், எதைச் செய்தாலும் ஏன் செய்தாய் என்று கேட்கமாட்டார்.

ஜோதாபாய் மங்கைப் பருவம் அடைந்தபோது, மிகவும் அழகு சௌந்தர்யத்தோடும் விளங்கினள். அவளது எழில் அழகைக்கண்டு அவள் மீது ஆசைப்படாத இளவரசர் யாரும் கிடையாது. ஆனால் ஜோதாபாயுக்கு எந்த இளவரசரையும், எந்த ராஜாவையும் பிடிக்கவில்லை போலும்! மணந்துகொள்ள முன்வந்து விண்ணப்பம் அனுப்பிய ராஜாக்கள்-இளவரசர்களின் கடிதங்கள் எல்லாம், 'ஸ்டாம்பு' ஒட்டாமல் கோர்ட்டில் தாக்கல் செய்த தஸ்தாவீஜ்களைப் போலானது. அவை எல்லாம் எழிலரசி ஜோதாபாயினல் பார்வையிடப்பட்டு, அப்படியே திருப்பி அனுப்பப்பட்டு விட்டன.

## வீராங்கணையின் வீரச்செயல்

இளவரசி ஜோதாபாய் நல்ல புத்திசாலியாய் இருந்ததோடு, ஓர் இணையில்லா வீரப் பெண்மணியாகவும் விளங்கி வந்தாள். குதிரை சவாரி செய்வதில் அதிகப் பிரியம் உடையவள். வாள்வீச்சு, ஈட்டிப் பாய்ச்சல், சிலம்ப வித்தை முதலியவைகளிலும் இளவரசி ஜோதா பாய் ஓர் அளவு தேர்ச்சிப் பெற்றிருந்தாள்.

சில சமயங்களில் தகப்பனுர் உதயசிங் போர்க்களம் போகும் போது, தானும் யுத்த ஆயத்தமாய் போர் உடை தரித்து, வாள்பிடித்து ஈட்டியைத்தாங்கி குதிரை மீதேறி போர்க் களம் புகுவாள். சில சமயம் படைகளத்தில் புகுந்து சண்டையும் செய்திருக்கிறுள்.

## ஜஹாங்கீரின் வீருப்பு

புரட்சி செய்த ரஜ்புத்தர்களை அடக்கும் வேலையில், முகலாய இளவரசன் ஜஹாங்கிர் நியமனம் பெற்றுன். ஜஹாங்கீரின் பலமான படை, ரஜ்புத்தர்களின் பிரதேசங்களில் புகுந்து அமர்க்களப்படுத்தி வந்தன. அப்போது வீரஜஹாங்கீரின் பெரும்படையை பலநாள் தடுத்து நிறுத்தி, அதிகமான கஷ்டம் கொடுத்து வந்த ஜோத்பூர் படைகளுக்கு யார் 'தளகர்த்தன்' என்று ஜஹாங்கிர் கண்டறிந்து ஆச்சரியப்பட்டான்.

ரஜ்புத்தர்களின் படைக்கு அப்போது வழிகாட்டியாக இருந்து நடத்தியவள் இளவரசி ஜோதாபாய்தான். ஒரு பெண் ஆண்போல் உடைதரித்து சமர்க்களத்தில் போராடுவதை, மன்னன் மகன் ஜிஹாங் கிர் கண்டறிந்து வியப்படைந்தான். வியப்பு மட்டும் அடையவில்லை; அந்த வீராங்கணையை வாழ்க்கைத் துணைவியாய் வரிக்கவேண்டும் என்றும் வீருப்பு கொண்டான்.

## ஜோத்பூர் வீழ்ந்தது

வீருப்புடனும் ரோஷத்துடனும் ஜிஹாங்கிர் படையானது ரஜ்புத்தர்களைத் தாக்கத் தொடங்கவே, ரஜபுத்தர்கள் உடல்தளர்ந்து தலைகுனிய வேண்டியதாயிற்று. ஜோத்பூரை முகலாய முஸ்லிம் படையினர் பிடித்துக்கொண்டு, அங்கு இஸ்லாத்தின் பெயரால் பச்சைப் பிறைக் கொடியை நாட்டினர்.

ஜோத்பூர் அரசன் மகா ராஜா உதயசிங், ஒரு வகையில் தீர்க்க புத்தியும் விவேசமும் உடையவன். எந்த வகையினுலேனும், தன் மகள் ஜோதாபாய் சௌக்கியமாய் இருக்க வேண்டும்; தன்னுடைய கிரீடமும் சிம்மாசனமும் தனக்கு நிலைக்க வேண்டு மென்று எண்ணினுன்.

## ஜோதாபாய்—ஜஹாங்கீர் திருமணம்

அக்கால வழக்கப் பிரகாரம், தோல்வியடைந்த சிற்றரசன் உதய சிங், வெற்றி பெற்ற சுல்தானின் சமுகத்தில் காணிக்கை செலுத்தி, அபயம் வேண்டிக் கொண்டான். அதாவது, தன் உயிர் போல் பாவித்து வந்த இளங் குமரி ராணி ஜோதாபாயை, ஜஹாங்கீர் இளவரசருக்கு திருமணம் முடித்துத் தருவதாகவும், அதற்குப் பதிலாய் தன்னை கௌரவப் படுத்த வேண்டும் என்றும் வேண்டிக் கொண்டான்.

வேண்டுகோள் ஒப்புக் கொள்ளப் பட்டது. ஜஹாங்கிருக்கும் ஜோதாபாயுக்கும் முறைப்படி 'கல்யாணம்' ஆய் விட்டது. மகா ராஜா பட்டமும் பெற்றார்.

## நூர்ஜஹான்—ஜோதாபாய் பிணக்கு

இளவரசி ஜோதாபாய், அரண்மனைக்கு வந்து சேர்ந்த போது, அங்கு நூர்ஜஹான் ராணி இல்லை. அதன் பிறகே ஜஹாங்கீரின் ஹிருதய ஆசனத்துக்கு ராணியாய் வந்தாள். அது வரை ஜோதா பாய் தான், ஜஹாங்கிரின் ஹிருதய ஆசனத்தில் அமர்ந்து காதலாட்சி புரிந்து கொண்டிருந்தாள்.

அதன் பின், நூர்ஜஹானும், ஜோதா பாயும் ஒரு வண்டியின் இரண்டு காளைகள் போல், சம்சார மென்னும் சகடத்தை, இல்லறப் பாதையில் தடை எது மின்றி இழுத்துச் சென்றனர். இருவரும் அறிவிற் சிறந்த ஆரணங்குகள். இருவரும் வாக்கு சாதுர்யம் படைத்த புலவிகள். அவ்விருவரும், சண்டைச் சச்சரவில் ஏசிக் கொள்ளாமல், கவிதை களாலேயே பேசிக் கொள்வர். இதைக்கண்டு ஜஹாங்கீர், ஆத்திரப்படுவதற்குப் பதிலாய் சந்தோஷப் படுவார்.

ராணி ஜோதா பாயைப் பற்றி பலர் பலவாறு குறை கூறினர்; கலப்பு மணம் பற்றி கதைகள் கட்டினர். ஆயினும் ஜோதாபாய், மனம் கோணாமல், உறுதி குலையாமல், ஜஹாங்கிருடைய ராணியாகவே இருந்து, அரண்மனை வாழ்விலேயே தன் உயிர் நீத்தாள்.

(தொடரும்)

# தப்ஸீறுல் ஹமீத் பீ தப்ஸீரில் குர்ஆனில் மஜீத்

தமிழ் நாட்டு முஸ்லிம்களது நன்மைக்காக திருக்குர் ஆனின் தப்ஸீரை தமிழ் பாஷையில் மிகவும் விளக்கமாகவும், தெளிவாகவும், சங்கை பொருந்திய ஸுன்னத்து வல்ஜமாஅத்தின் உலமாக்களாலும் இமாம்களாலும் எழுதப்பட்ட தப்ஸீர்களை ஆதாரமாகக் கொண்டு, மிகப் பிரயாசையோடு யாவரும் ஆமோதித்து புகழத்தக்க விதமாய் விளக்கத்தோடு இத் தப்ஸீரை எழுதி அச்சிட்டு வெளியிட்டிருக்கிறோம்.

இந்த தப்ஸீரில் குர்ஆன் ஆயத்துகளை அறபியில் அழகாக எழுதி போட்டோ பிளாக் செய்யப்பட்டு தனித்தனியாக ஆங்காங்கு அமைத்து அதன் கீழ் சரியான தர்ஜுமாவும், தப்ஸீர் என்னும் விரிவுரையும், வியாக்யானமும், ஷஃனு நுஸூல் என்னும் ஒவ்வொரு ஆயத்தும் இறங்கிய காரணங்களும், அதற்கேற்ப ஹதீது, ரிவாயத்து, ஹிக்மத்து, பாயிதா, கிஸ்ஸா, அஜீபா முதலிய அரும் பெரும் ஆதாரங்களும் ஒருங்கே சேர்த்து அமைக்கப் பெற்றிருக்கின்றன.

**முதல் பாகம் :** இந்த தப்ஸீர் ஸூறத்து பாத்திஹா—பகருவி லிருந்து ஸூறத்துன்னிஸா முடிய (ஒரு மன்ஸில்) $5\frac{1}{4}$-ஜுஸூ வரை இதன் விலை ரூ. 10–00

**இரண்டாம் பாகம்:** சூறத்துல் மாயிதா முதல் ஸூறத்துத் தௌபா முடிய (சுமார் 5-ஜுஸூ) இரண்டாம் பாகமாக வெளி வந்திருக்கிறது. இதன் விலை ரூ. 10–00

**மூன்றும் பாகம்:** சூரே யூனுஸ் முதல் ஸூறத்துந் நஹ்ல் முடிய 7-சூறுக்களின் தப்ஸீர் மூன்றும் பாகமாக வெளி வந்திருக்கிறது. இதன் விலை ரூ. 10–00

**நான்காம் பாகம்:** ஸூரத்துல் இஸ்ராஉ முதல் ஸூரத்து நூர் முடிய 8 ஸூராக்களின் தப்ஸீர் நான்காம் பாகமாக வெளி வந்திருக்கிறது. இதன் விலை ரூ. 10–00

5-ம் பாகம் அச்சாகிறது.

---

கிடைக்குமிடம்:—

**ஹாஜி எம். எ. ஷாஹுல் ஹமீது அண்டு ஸன்ஸ்**

நெ. 20, ஹைரோட், திருவல்லிக்கேணி, மதறாஸ் 5.

# மவ்லானா ம்தனீ ஸாஹிப்-மர்ஹூம்

(ரஹ்மத் பாகவி)

“மவுத்துல் ஆலிமி, மவுத்துல் ஆலமி” - (ஒரு ஆலிம் அறிஞரின் மரணமானது, ஒரு பிரபஞ்சமே மாண்டதற்கு ஒப்பாகும்) என்பது நபிகள் நாயகம் முஹம்மத் ரஸூலுல்லாஹி (ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம்) அவர்கள் நவின்றுள்ள அறவுரையாகும்.

குடும்பத்தலைவர் ஒருவர் இறந்து விட்டால், அந்த குடும்பமே நிர்க்கதியாய் கலகலத்துப் போவதைப் போல், ஒரு சமூகத்து போதகப் பெரியார் இறந்து விட்டால், அந்த சமூகமே, ஞானாராய்ச்சித் துறையில் நிர்க்கதியாகி விட்டதென்றே கருதப்படவேண்டும்.

பத்லே ஜலீல்-ஷெய்குல் இஸ்லாம்-ஹஜ்ரத்-அல்ஹாஜ், மவ்லானா ஸெய்யித் ஹுஸைன் அஹ்மத்-மதனீ ஸாஹிப் அவர்கள், கொஞ்ச காலம் உடல் நலம் இல்லாமல் இருந்து 6-12-57-ந் தேதி தமது 83-ம் வயதில், தேவ்பந்தில் வபாத்தாகி இறந்து போய்விட்டார்கள் என்ற விஷயம், இந்தியா முழுவதிலும் மிகவும் அனுதாபத்துடன் செவியேற்கப்பட்டது.

மவ்லானா மதனீ ஸாஹிப் (மர்ஹூம்) அவர்கள், இன்று நேற்று தோன்றிய-வெளிவேஷக்கார தலைவரல்ல; உண்மையாகவே, அறிவு ஆராய்ச்சியாலும், இடையறு உழைப்பாலும், இந்திய சுதந்திரத்துக்கும் விடுதலை போராட்டங்களுக்கும், இஸ்லாமிய கல்வி, ஞான ஆராய்ச்சிக்கும் தொடர்ந்து அரை நூற்றாண்டு மேல் பாடுபட்டு, உழைத்த அண்ணலாவர்.

மவ்லானா மதனீ அவர்கள், மகாத்மா காந்திஜீயுடனும் லண்டனில் நம் தேசத்திற்காக உயிர் நீத்து பைத்துல் முகத்திஸில் அடக்கமான மவ்லானா முஹம்மத் அலி-ஜவ்ஹர் உடனும் உழைத்துப் பாடுபட்ட பழம் பெரும் தேசத் தியாகியாவர். “மால்ட்டா கைதி” என்று பெயர் பெற்றவர் நம் மதனீ மவ்லானா! ஆங்கிலேய அரசாங்கத்தார் இந்தியாவில் அடக்குமுறை புரிந்த நாளில், மதனி மவ்லானா அவர்கள், தம் எழுத்து மூலமும் பேச்சு மூலமும், தேச விடுதலைப் போருக்கு ஊக்கமும் ஆக்கமும் அளித்து வந்தார்கள் என்பதற்குப்பயந்து ஆங்கிலேயர் அவரை பாது காப்புக் கைதியாக பிடித்து ‘மால்டா’ என்னும் கடல் கடந்த நாட்டில் கண்காணு தேசத்தில் பல வருஷங்கள் சிறையில் அடைத்து விட்டார்கள். ஆகவேதான் இவருக்கு ‘மால்டா கைதி’ என்று பெயர் வந்தது.

ஆதியில் காங்கிரஸ் மகாசபையும், அகில இந்திய முஸ்லிம் லீகும் வெவ்வேருக இருக்க வில்லே. அதாவது காங்கிரஸின் உடலி லிருந்து முஸ்லிம் லீக் என்னும் 'அர்த்த நாரி' பிறக்கவே இல்லே. அந்தக் காலத்தில் காயிதே ஆஜம் முஹம்மத் அலி ஜின்னு, மவ்லானு அபுல் கலாம் ஆஜாத், நம் மர்ஹூம் மவ்லானு ஸெய்யத் ஹுஸைன் மதனீ ஸாஹிப் போன்ருேர் காங்கிரஸ் மெம்பர்களாகத்தான் இருந்தார்கள். அந்தக் காலந் தொட்டு இந்தக்காலம் வரை, மவ்லானு மதனீ சாஹிப் (மர்ஹூம்), காங்கிரஸ் மகா சபையை விட்டு விலகாமல், ஸ்திர மெம்பராய் இருந்து பாடுபட்டு வந்தது மிகவும் பாராட்டத்தக்கதாகும்.

மவ்லானு மதனீ ஸாஹிபவர்கள், காங்கிரஸுக்கும் தேசத்துக்கும் பாடுபட்டார் என்பதற்காக மட்டும் அவரை இந்திய-பாக் முஸ்லிம்கள் பாராட்டவில்லே. ஆனுல், மவ்லானு அவர்கள், இஸ்லாமிய கல்வி ஆசாரத்துக்கும், அரபிமொழி அபிவிருத்திக்கும், தீனுடைய இல்மு அகில மெங்கும் பரவ வேண்டு மென்றும் பெரிதும் உழைத்து வந்தார்கள். இத்தொண்டில், சென்னேக்கும் பெங்களூருக்கும் மற்றும் ஊர்களுக்கும் வந்து, பல அரிய வஃலு-ஹதீது-உபதேசங்கள் புரிந்துள்ளார்கள்.

மவ்லானு அவர்கள், தேவ் பந்து தாருல் உலூம் மத்ரஸாவுக்கும், டில்லி ஜம்யியத்துல் உலமா சபைக்கும், மற்றும் பல இஸ்லாமிய கல்வி ஸ்தாபனங்களுக்கும் உயிர் நாடிபோல் இருந்து சேவை செய்து உள்ளார்கள்.

இந்தியாவிலும், பாக்கிஸ்தானிலும் இவர்களின் முரீது சிஷ்ய கோடிகள் பல்லாயிரம் பேர் இருந்து வருகிருர்கள்.

எல்லாம் வல்ல இறைவன், மர்ஹூம் மவ்லானு மதனீ ஸாஹிப் அவர்களின் ஆத்மாவுக்கு சாந்தியையும் சுவனபதியையும் அளித்தருள்வானுக. ஆமீன்.

(34-வது பகுதி)

# திருக் குர்ஆன் : : : : : : : : சார சங்கிரஹம்

## பல விஷயங்கள் பற்றிய பல ஆயத்துகள்.

(ரஹ்மத் பாகவி)

### யாருடைய தவ்பா ஒப்புக் கொள்ளப்படும்?

(அடியார், பாப மன்னிப்பு கோரும்) தவ்பாவை, இறைவன் ஒப்புக் கொள்கிறான்; ஆனால், அறியாமையினால் பாபம் செய்து விட்டு உடனே (வருந்தி), மன்னிப்பு கேட்டுக் கொள்கிறார்களே அவர்களுடைய (தவ்பா) வைத்தான், அல்லாஹ் (தஆலா) வும் (விரும்பி) ஏற்றுக் கொள்கிறான். அல்லாஹ் (தஆலா) மிக்வும் அறிபவனாகவும் விவேகமுடையவனாகவு மிருக்கின்றான். மேலும், (சிலர்) பாபங்களை (தொடர்ந்து) செய்து கொண்டிருந்து, அவர்களுக்கு (கோவினை) மரணம் வந்து சூழ்ந்து கொள்ளும் போது (மட்டும்) செய்கிறார்களே அவர்களுடைய 'தவ்பா', எவ்விதப் பொருளும் உடையதல்ல; (இது ஏற்றுக்கொள்ளப்படாததால்) இன்னோர் "(ஐயோ முஸ்லிமாகிய) ன்எனுடைய தவ்பா, காபிராகி மரித்துப் போனார்களே அவர்களுடைய (வீணான) தவ்பாவைப் போல் பொருளற்றதாய் விட்டதே" என்று (குறை) கூறுவார்கள். இன்னோருக்குத்தான் (மறுமையில்) பயங்கரமான வேதனை உண்டாயிருக்கிறது.

(ஜுஸ்உ: லன் தனு; ஸூரா-நிஸா; ருகூ: 3)

### தவ்ராத்திலும் சன்மார்க்கப் பிரகாசம் உண்டு.

நிச்சயமாக (இறைவனாகிய) நாம், (உண்மை வேதமாக) தவ்ராத்தை இறக்கி வைத்தோம்; அதிலும் சன்மார்க்கமும் (ஞானப்) பிரகாசமும் உண்டு. அல்லாஹ்வுக்கு முற்றும் வழிபடும் நபி (மூஸா அலைஹிஸ்ஸலாம்), யூதர்களுக்கு இந்தத் தவ்ராத் (வேதத்) தையொட்டி கட்டளைகளை எடுத்தோதினார். இதையொட்டியே ஆண்டவனுக்குப் பணிவோரும், அறிஞர் (ஆலிம்) களும் (ஜனங்களுக்கு) கட்டளைகளை எடுத்தோதினார்கள். ஏனெனின் இன்னோரெல்லோரும் இறைவனின் இந்த வேதத்தைப் பாதுகாப்பவர்களா யிருந்தனர்; அதைப் பாதுகாத்தும் வந்தனர். ஆகையினால் யூதர்களே, நீங்கள் (உங்களைப் போன்ற) மனிதர்களுக்குப் பயப்படாதீர்கள். (இறைவனாகிய) என்னுடைய (ஆயத்து எனும்) அத்தாக்ஷிகளுக்குப் பகரமாய் அற்ப காசுகளை (விலையாகப்) பெறாதீர்கள். (இது நன்றாய்) ஞாபக மிருக்கட்டும். (அதாவது) யாரேனும் (தலைவர்), இறைவனால் இறக்கி வைக்கப்பட்ட வேதக் கட்டளைக்கு ஒப்ப, கட்டளையிட

வில்லையாயின், இன்னோரும் காபிர்களே (போல்) ஆவர். நாம் தவ்ராத் வேதத்தில் (இவ்வாறு) கட்டளை யிட்டிருந்தோம். (அதாவது) உயிருக்காக உயிர், கண்ணுக்காக கண், காதுக்காக காது, பல்லுக்காக பல் (பழிக்குப் பழி வாங்கப்படும்.) காயங்களுக்குப் பதிலாக அதேபோன்ற (அளவு) காயம்தான் (பழிவாங்கப்படும்). ஆயினும் யாரேனும் ஒருவர் (துன்பமடைந்தவர், துன்புறுத்தியவனை) மன்னித்து பழிக்குப் பழி வாங்காதிருந்து விட்டால், இதானது அவருடைய பாபங்களுக் கெல்லாம் பரிகாரமாய் விடுகிறது. மேலும் எவனேனும் ஆண்டவன் (வேதம் மூலம்) இறக்கியவைகளுக்கு நேர்மையாய் கட்டளை யிடவில்லையாயின் அவனும் அநியாயம் செய்தவனே யாவான்.

(ஜுஸு: லாயுஹிப்புல்லாஹ்; ஸூரா-அல்மாயிதா; ருகூ: 7)

## தவ்பாவுக்குப் பிறகு நல்லவர்களாக மாறிவிடுவோர்!

(ஏ நபியே!) உங்களுடைய இரக்ஷகனின் நல்ல தன்மைகளில் ஒன்று யாதெனில்: யாரேனும் அறியாமையினால் பாபம் செய்து விட்டுப் பிறகு (வருந்தி) தவ்பா செய்து கொள்வதோடு நல்லவராக மாறி விடுவாரானால் (நிச்சயம் ஏற்றுக் கொள்ளப்படும்). அவரது தவ்பாவுக்குப் பிறகும் உம்முடைய இறைவன் மிகவும் மன்னிப்பவனாகவும், அன்பு உடையவனாகவும் இருக்கின்றான்.

(ஜுஸு: ருபமா; ஸூரா: நஹ்ல்-ருகூ: 15)

## விதி என்னும் பட்சி மனிதரை வட்ட மிடுகிறது.

ஒவ்வொரு மனிதருக்கும் (இறைவனாகிய) யாம், (விதி வசம் என்னும்) பட்சியை அவரது கழுத்துடன் (ஒட்டி) வட்ட மிடும்படிச் செய்துள்ளோம். (எனவே, மனிதனை விட்டு அவனது விதி விலகிப் போக மாட்டாது.) இறுதி தீர்ப்பு நாளின் போது யாம், அந்த மனிதனுடைய கிரியைகளின் ஏட்டை வெளிப் படுத்துவோம். அது அவன் முன் விரிந்து கிடப்பதைக் காண்பான். (அப்போது அவ்னை நோக்கி) "இதோ, உன்னுடையதை (செயல் நிகழ்ச்சியை) படித்துக் கொள்; உன்னுடைய செயல்களுக்கு கணக்குப் பார்த்துக் கொள்ள நீயேபோதுமானவனாக இருக்கின்றாய்" என்று கூறப்படும்.

(ஜுஸு: ஸுப்ஹானல்லதீ; ஸூரா: பனிஇஸ்ராயீல்; ருகூ: 2)

## 'தவக்குல்' வைப்பவரை ஆண்டவன் நேசிக்கிறான்.

(ஏ முஹம்மத் நபியே,) நீவிர் மிக இளகிய மனதை யுடையவராய்த் திகழ்வது, ஆண்டவனுடைய (மகா) கிருபையினால் தான். (மதப் போராகிய ஜிஹாதில், உம்முடன் சேர்ந்துழைக்காமல் விலகி விட்டவர்களை நோகாதிர்;) அவர்கள் விஷயத்தில் நீவிர் கடும் மொழி

யாளராகவும், கடினசித்தமுள்ளவராகவும் இருந்திருந்தால், அவர்கள் உம்மை விட்டு (இஸ்லாத்தையே விட்டு) ஓடிப் போய் இருப்பார்கள். ஆகையால் அவர்களை நீர் மன்னித்து விடுவீராக. இன்னும் அவர்களுக்காக பாப மன்னிப்பு—துஆ செய்வீராக; இதர (பொதுக்) காரியங்களில் அவர்களுடன் ஆலோசனையும் செய்வீராக. இவ்வாறு நீங்கள் ஒரு விஷயத்தில் முடிவுக்கு வந்து விட்டால், ஆண்டவன் மீது (பொறுப்பு விட்டு) தவக்குல் வைப்பீர்களாக. நிச்சயமாக, தவக்குல் வைப்பவர்களை ஆண்டவன் (மிகவும்) நேசிக்கின்றான்.

(ஜுஸு: லன்தனு; ஸூரா: ஆலஇம்ரான; ருகூ: 17)

## தயம்மும், மஸஹு செய்யும் சமயங்கள்.

நம்பிக்கை கொண்டவர்களே, (முஸ்லிம்களே,) நீங்கள் 'மயக்கத்திலாயிருக்கும் பொழுது தொழுகைக்கு நெருங்கிச் செல்லாதீர்கள். (புத்தி சுவாதீனத்துடன் தொழுது கொள்ளுங்கள்); நீங்கள் என்ன ஓதுகிறீர்கள் என்பதைஉணர்ந்து (தொழுது)கொள்ளுங்கள். மேலும் நீங்கள் ஜனுபத் (தொடக்கு) உள்ளவராயிருக்கும் நிலையில், (நன்கு) குளித்து முழுகாமல், (தொழுகைக்குச் செல்லாதீர்கள்). ஆனால், பிரயாணத்தில் (ஊருக்கு வெளியில்) இருந்தால் பாதகமில்லை; (அதாவது:) நீங்கள் நோயாளியாகவோ, வழிப்பிரயாணியாகவோ இருந்தால், அல்லது உங்கள் மலத்துவார வழியாய் (ஏதேனும் மலம்) வெளிப் பட்டிருந்தால் அல்லது நீங்கள் (சம்போகத்துக்காக) பெண்டிரைத் தொட்டிருந்தால், (இப்படிப்பட்ட சமயங்களில்) உங்களுக்குத் தண்ணீர் கிடைக்காமல் போய் விட்டால், சுத்தமான மண்ணைக் கொண்டு 'தயம்மும்' செய்து கொள்ளுங்கள்; (அதாவது, மண்ணைத் தொட்டு) நீங்கள் உங்கள் முகத்தையும், கைகளையும் துடைத்து (மஸஹு செய்து)க் கொள்ளுங்கள். நிச்சயமாக அல்லாஹு (தஆலா) (இதை யெல்லாம்) மன்னிப்பவனாகவும், அருள் பாலிப்பவனாகவும் இருக்கின்றான்.

(ஜுஸு: வல்முஹ்ஸினாத்; ஸூரா: நிஸா; ருகூ: 7)

## தண்ணீ ரின்றேல் மண்கொண்டு சுத்தம் செய்யும் விதம்

நம்பிக்கை கொண்டவர்களே, (முஸ்லிம்களே), நீங்கள் தொழுகைக்காக எழுந்து நிற்பீர்களாயின் (செல்வீர்களாயின்,) முதலில் உங்கள் கரங்களை முழங்கை வரைக்கும். (தண்ணீர் கொண்டு) கழுவிக் கொள்ளுங்கள்; மேலும் தலைக்கு மஸஹும் (நீர் கொண்டு துடைத்தலும்) செய்து கொள்ளுங்கள். மேலும் இருபாதங்களையும் கெரண்டை வரையில் கழுவிக் கொள்ளுங்கள். இன்னும் நீங்கள் சுத்தமில்லாமல் (தொடக்காக) இருந்தால், குஸ்லு (என்னும் முழு ஸ்நானம்) செய்து கொள்ளுங்கள். மேலும் உங்களில் யாரேனும்

வியாதியஸ்தராக இருந்தால், அல்லது வழிப்பிரயாணத்தில் இருந்தால், அல்லது உங்களில் யாருக்கேனும் பின் துவாரத்தால் (மலம்) வெளி வந்திருந்தால், அல்லது நீங்கள் பெண்டிரை (சம்போகத்துக்காக) தீண்டியிருந்தால்; (இப்படிப்பட்ட நிலைமைகளில்) தண்ணீரும் கிடைக்காமல் போனால், சுத்தமான மண்ணைக் கொண்டு 'தயம்மும்' செய்து கொள்ளுங்கள். (அதாவது) அந்த மண்ணினால் உங்கள் முகத்தையும், கைகளையும் துடைத்துக் கொள்ளுங்கள். அல்லாஹ் (தஆலா) உங்கள் மீது (எந்த விதமான) சிரமத்தை(யும்) போட விரும்ப வில்லை. ஆனால் உங்களை (அகமும் புறமும்) பரிசுத்தப் படுத்தவும், உங்கள் மீது தன்னுடைய பாக்கியத்தை புரியவுமே விரும்புகிறான்; இது நீங்கள் நன்றியுடையவர்களாய் இருக்கும் பொருட்டே யாகும்.

(ஜுஸ்உ: லாயுஹிப்புல்லாஹ்; ஸூரா: மாயிதா; ருகூ: 2)

## தவ்பா செய்தால் உங்கள் பாபம் மன்னிக்கப் படலாம்.

நம்பிக்கைகொண்டவர்களே(முஸ்லிம்களே), அல்லாஹ்(தஆலா) வுடைய சன்னிதானத்திலே நீங்கள் உண்மையான உள்ளத்தோடு (பாப மன்னிப்புக்காக) தவ்பா செய்து கொள்ளுங்கள்: உங்களுடைய இரக்ஷகன் (இதனால்) உங்களுடைய பாபங்களை மன்னிப்பான் என் பதில் அதிசய மில்லை. மேலும் உங்களை (சுவர்க்கத்தின்) உல்லாஸ வனங்களில் பிரவேசிக்கச் செய்வான்; (அது எப்படிப்பட்டதெனின்:) அதன் கீழ் நதிகள் ஓடிக்கொண்டிருக்கும். (அது எப்படிப்பட்ட நாளெனின்) அந்த நாளில் அல்லாஹ் (தஆலா), தன்னுடைய நபி மாரையும், நம்பிக்கை (என்னும் ஈமான்) கொண்ட பேர்களையும் ஒரு போதும் கண்ணியக் குறைவு செய்ய மாட்டான். அவர்களுடைய ஈமானுடைய மெய் யொளியானது அவர்களுக்கு முன்னாலேயும், அவர்களுக்குப் பக்க வாட்டிலும் வியாபித்து (இலங்கிக்) கொண்டி ருக்கும். இவர்கள், "எங்கள் இறைவனே, எங்களுக்குரிய இந்தப் பிரகாசத்தை சாஸ்வதமாக்கிவைப்பாயாக. எங்களுக்கு பாப மன் னிப்பு செய்வாயாக. நீயோ எல்லாவற்றின்மீதும் சக்தியுடையவனாக இருக்கின்றாய்." என்று கூறுவார்கள்.

(ஜுஸ்உ: கத்ஸமியல்லா; ஸூரா: தஹ்ரீம்; ருகூ: 2)

(தொடரும்)

# சிறைப் பறவை சிப்கத்துல்லா
## அல்லது
# துப்பு துலக்கிய தூயவர்.

### அத்தியாயம் 15

போலீஸார் வந்த பொழுது கடைசி விருந்தாளியும் மறைந்து விட்டார். ஆம்புலன்ஸ் வந்த அதே சமயத்தில் அந்த வட்டாரத்தில் அலுவலாக விருந்த இன்ஸ்பெக்டர் இனயத்துல்லாவும் வந்தார். டாக்டர் சிறிது நேரம் சோதனை செய்தார்.

"அவன் இன்னும் இறக்கவில்லை; ஆனால் ஆஸ்பத்திரிக்குக் கொண்டு செல்லுமுன்பு அவன் இறந்து விடலாம்" என்று அவர் கூறினார்.

"இது தற் கொலையா?"

அவர் தலை அசைத்தார்.

"தற் கொலை செய்து கொள்வோர் வழக்கமாக வலது தோள் பட்டைக்குக் கீழே சுட்டுக் கொள்வதில்லை. சத்திர சிகிச்சை மிகக் கஷ்டமானதாக விருக்கும். நீங்களே முயற்சி செய்து பாருங்கள். திறந்த கதவு வழியாக அவன் சுடப்பெற்றிருக்க வேண்டும் என்று நான் கருதுகிறேன்".

காயத்துக்கு அவர் கட்டுப்போட்டார். "லிப்ட்"டில் காதர்கான் கொண்டு செல்லப்பட்டான். கீழே ஸ்ட்ரெச்சரில் அவன் கிடத்தப் பெற்று போர்வையால் போர்த்தப்பெற்றான். கூட்டத்தினூடே அவன் ஆம்புலன்ஸுக்குக் கொண்டு செல்லப்பட்டான்.

"கொலை அல்லது கொலை செய்வதற்கு முயற்சி, எவ்வாறுவது இருக்கட்டும். விருந்தாளிகளை எவனே சரிக்கட்டி விட்டான், ஷர் புத்தீன் நீ தான் என்று நான் நினைக்கிறேன். உனது புத்தகத்தை என்னிடம் காட்டு" இன்ஸ்பெக்டர் அதிகார தொனியில் கேட்டார்.

பதிவுப் புத்தகத்தில் காணப்பட்ட பெயர் ஜாபிதாவைக் கவனித்துக் கொண்டே சென்று எட்டாம் எண்ணுள்ள அறைக்கு வந்ததும் அங்கு விரலை அடையாளம் வைத்துக்கொண்டார்.

"சிறு காவேரிபாக்கம் சின்ன தம்பி மரைக்காயரா? சிறு காவேரிபாக்கம் சின்ன தம்பி மரைக்காயர் யார்?"

"எனக்குத் தெரியாது, இன்ஸ்பெக்டர் சாஹிப். டெலிபோன் மூலம் ஒரு அறையை அவர் பேசி ஏற்பாடு செய்து கொண்டார். அவர் வெளியே சென்றபோது நான் பார்க்கவில்லை."

"விபத்து சமயங்களில் தப்பிச் செல்வதற்கான மார்க்கம் சரியாக இயங்கிக் கொண்டிருக்கிறதா?" அவர் வினவினர், "வேறு எவராவது

இங்கு இருந்திருக்கிறார்களா? காயமுற்ற மனிதன் யார்? அவனது முகம் பார்த்த முகம்போல தோன்றுகிறது.''

''காப்டன் காதிரி,''

''யார்?'' இன்ஸ்பெக்டர் கடுமையாகக் கேட்டார். ''முடியாத காரியம். காப்டன் காதிரி என்பவர்...''

காப்டன் காதிரி! அவருக்கு இப்போது நினைவு வந்தது. வலிமாவின் போது அவனை அவர் கண்டிருக்கிறார். ''கான்சாஹிப் கரீமுல்லாவின் மகளை மணந்து கொண்டிருப்பவன் அல்லவா அவன்?''

''அவன் இங்கு என்ன செய்து கொண்டிருந்தான்? ஷர்புத்தீன், கக்கிவிடு—உண்மையை உரைத்துவிடு, இல்லாவிடில் நீ தொல்லைக் குள்ளாவாய்.''

''எனக்குத் தெரிந்ததை யெல்லாம் நான் சொல்லிவிட்டேனுங்க அவர் காப்டன் காதிரி ஆவார்.''

திடீரென அவனுக்கு ஞானோதயம் ஏற்பட்டது.

''அவர் யார் என்று தெரிந்து கொள்ள விரும்பினீர்களானல், அவர் காதர்கான். காப்டன் காதிரி என்பது அவரது மறு பெயர், மாறு பெயர்''.

''யார்?''

இன்ஸ்பெக்டர் இனயத்துல்லா தமது வாழ்வில்-தொழிலில்-அனேக அதிர்ச்சிகளை அனுபவித்திருக்கிறார். ஆனல் பல வருடங் களுக்கு பிறகு அவருக்குச் சம்பவித்த மிகப் பெரிய அதிர்ச்சி அது.

''காதர் கானு? கரீம் ஷரிபின் மைந்தனு?''

ஷர்புத்தீன் 'ஆம்' என தலையசைத்தான். ''எங்களில் இரண் டொருவரைத் தவிர வேறுயாருக்கும் அவர் யார் என்பது தெரியாது. பகிரங்கமாக, காதர்கான் காரிய மாற்றுவதில்லை.''

இன்ஸ்பெக்டர் தலையாட்டினர் ''அவனை நான் கண்டதே யில்லை. கரீம் ஷரீபுக்கு மைந்த னெருவன் உண்டு என்பது எனக்குத் தெரியும். ஆனல் அவன் கபடவேடதாரி என்பது எனக்கு எள்ளளவும் தெரி யாது. அவன் அறியாத பிள்ளை என்று எண்ணிக் கொண்டிருந்தேன்.''

''அவரிடம் சிறு பிள்ளைத் தனமும் கலந்திருக்கிறது என்பதை நான் சொல்லிக் கொள்ள விரும்புகிறேன்.''

கைகளில் முகத்தைத் தாங்கியவராக இன்ஸ்பெக்டர் உட்கார்ந்து கொண்டார்.

''ஜனபா காதிரிக்குத் தகவல் அறிவித்து விடவேண்டும். பாவம்! கான் சாஹிபின் அருமை மகள்-கரீம் ஷரீபின் மைந்தனுக்கு, மகளை மணம் முடித்து வைத்திருக்கிறோ மென்பது கரீமுல்லாவுக்குத் தெரியாது.''

"அவருக்குத் தெரியுமா, தெரியாதா என்பதை நான் அறிய மாட்டேன்" ஷர்புத்தீன் சொன்னான், "வயோதிக கான் சாஹிபை நான் அறிவேனாயின், ஷைத்தானை அவரது மகள் மணந்து கொண்டிருக்கிறாள் என்று கூறி விடுவேன். ஷைத்தானை விட இக்கொடியவன் கேடு கெட்ட கயவன். ஒருவகையில் நான் விஷயத்தைக் கக்கி வருகிறேன். ஆனால் உங்களுக்குத் தெரிந்திருக்க வேண்டு மல்லவா? செய்தியைக் கேட்டறிந்ததும் கரீம் ஷரிபே உங்களிடம் உண்மையை உரைத்து விடுவார்."

"இங்கு வா" இன்ஸ்பெக்டர் கூறினார். அவனது கையைப் பற்றி யிழுத்துக் கொண்டு தனி யறைக்கு அழைத்துச் சென்றார். அந்த அறையில் அவசரம் அவசரமாக விருந்துண்டோர் வெளியேறியதற்கான அறி குறிகளை அவர் கண்டார். கதவை மூடி விட்டு, "உனது கதைக்கு ஆதார மென்ன?" என்று அவர் வினவினார்.

"எனக்கு எதுவும் தெரியாது, இன்ஸ்பெக்டர். ஆனால் வெகு நாட்களாக கரீமுல்லாகானை கண்ணியில் சிக்க வைப்பதற்கு அவர்கள் முயற்சித்து வந்தார்கள் என்பது மட்டும் எனக்குத் தெரியும். ஓர் இரவு அவரை அவர்கள் அழைத்து வந்து, சூது வாதுள்ள சூதாட்டக்காரர்களிடம் காதர்கான் சிக்கிக் கொண்டிருப்பதாக அவர் நினைக்கும்படி செய்தார்கள். காதர்கானை கரீமுல்லா கண்டதில்லை; உண்மையை உரைக்குமிடத்து அவன் காதர் என்பது எனக்குக் கூட அப்போது தெரியாது. அவனைப் பற்றி நான் பற்பல விதமாகக் கேள்விப் பட்டிருக்கிறேன்; ஆனால் மற்றவர்களைப் போலவே அவனை நானும் கண்டதில்லை. கரீமுல்லாவுக்கு அவர்கள் 'தொப்பி' போட்டார்கள். காதர்கானை அவர் அழைத்துச் சென்றார். ராணுவ உத்தியோகஸ்தன் உடையில் இருந்த அவனைக் கண்டு அவர் சுலபத்தில் ஏமாந்து விட்டார். இவ்வாறாக, கான் சாஹிபின் வீட்டுக்குப் போய் அவருடனும் அவரது அருமைமகளுடனும் அவன் அறிமுகமானான். மர்யமுக்கும் அவனுக்கும் மணம் நிகழ்ந்தது பற்றிக்கேள்விப்பட்ட போது, கரீமுல்லாவுக்குத் தெரிந்திருக்கும் என்று எண்ணினேன். அவரை அக்கயவர்கள் வஞ்சித்து மோசம் செய்தனர் என்று நான் கனவிலும் கருதவில்லை."

"கரீமுல்லாவுக்குத் தெரியாது," இன்ஸ்பெக்டர் மெதுவாகச் சொன்னார், "அந்தப் பெண் எங்கே?"

"என்னால் சொல்ல முடியாது, அவள் இங்கு தான் எங்காவது இருந்து கொண்டிருப்பாள்."

"உம்மத் உணவு இல்லத்தில்," இன்ஸ்பெக்டர் பேசினார். "சிறு காவேரி பாக்கம் சின்ன தம்பி மரைக்காயர் என்பவர் யார் என்பதை நீ தெரிவித்தாக வேண்டும். உனது வழக்கமான கையெழுத்தை விட வேறு விதமாக அப்பெயர் எழுதப்பட்டிருக்கிறது; பீதி கொண்ட

ஒருவன் எழுதியது போல் காணப் படுகிறது. வேறு விதமாகச் சொல்ல வேண்டுமானல், காதர்கானின் உடலை நீ கண்ட பிறகு அது எழுதப் பெற்றிருக்க வேண்டும்.”

ஷர்புத்தீன் பதிலொன்றும் சொல்ல வில்லை. “அந்த மனிதன் வெளியே வருவதை நீ பார்த்தாய்? அவன் யார்?”

“நான் இந்த நிமிஷத்திலேயே இறந்து விடத் துணிந்தால்...” பணியாள் நீட்டினன்.

இன்ஸ்பெக்டர் இதமாக இயம்பினர். “கொலைகார னெருவனை நீ மறைத்தாயானல், பின்னர், ‘உடந்தையாள்’ என்ற முறையில் சில மாதங்களில் நீ இறக்கத்தான் போகிருய். ஆகவே, உயிருக்குப் பயந்தாவது உண்மையைச் சொல்லி விடு. சின்ன தம்பி மரைக்காயர் என்பவர் யார்?”

ஷர்புத்தீன் தயங்கினன், தத்தளித்தான். சிறிது நேர மனப் போராட்டத்துக்குப் பிறகு உண்மையை உரைத்தான்.

“சிப்கத்துல்லா இன்றிரவு இங்கு இருந்தார்.”

இன்ஸ்பெக்டர் ‘சிட்டி’ அடித்தார். கதவு தட்டப் பெற்றது. உத்தரவுக்காக போலீஸ் உத்தியோகஸ்த ரொருவர் வெளியே காத்துக் கொண்டிருந்தார்.

“கீழே ஒரு பெண் இருக்கிருள். அவள் அனேகமாகப் பைத்தியங் கொண்டவளை போலவே காணப்படுவாள். அவளை உங்களுக்குத் தெரியும் என்று எண்ணுகிறேன்.”

“ஜீனத் அல்லவே?”

“ஆம், அவள் தான். அவளை உள்ளே வரச் சொல்லட்டுமா?

“சரி, அவளை இங்கு அழைத்துக் கொண்டு வா.”

ஒரு விநாடியில் அவள் அங்கு ஆஜர் செய்விக்கப்பட்டாள். தலைவிரி கோலமாக, கை, கால்கள் நடுங்க நின்று கொண்டிருந்தாள்; மனம் பேதலித்தவளாகக் காணப்பட்டாள்.

“அவர் இறந்து விட்டாரா?” அவள் அழுது கொண்டே வினவினள். “அல்லாஹ் வுக்காக, எனக்கு பதில் சொல்லுங்கள். உங்கள் முகத்தைப் பார்த்து, அவர் இறந்து விட்டார் என்று நான் ஊகிக்கிறேன். சொல்லுங்கள்.”

“தயவு செய்து நீ உட்கார்,” கருணை கூர்ந்து இன்ஸ்பெக்டர் சொன்னர். “உன்னையும் என்னையும் போலவே அவர் உயிருடனிருக்கிருர். பணியாள் ஷர்புத்தீனைக் கேட்டுப்பார். காதர்கான் நல்ல நிலையிலேயே இருக்கிருன். இலேசான காயம்; அவ்வளவு தான். கவலைப்படுவதற்குக் காரணமில்லை. விஷயம் என்ன? உனக்கு ஏதாவது சமாசாரம் தெரியுமா?”

அவளால் பதிலளிக்க முடிய வில்லை.

"அவர் இறந்து விட்டார்," அவள் அழுது புலம்பினாள், "என் இறைவா! அவரைக் கொன்றவள் நான் தான். அவரைக் கண்டு பின் தொடர்ந்து வந்தேன்."

"சூடான தேநீர் கொண்டு வா" ஷர்புத்தீனுக்கு இன்ஸ்பெக்டர் கட்டளை யிட்டார்.

மேஜை மீதிருந்த கோப்பையில் தேநீர் ஊற்றி அவளது பல் களுக்கிடையில் திணித்தான்.

"ஜீனத், புத்திசாலித்தனமாகப் பேசு. காதர் இறக்க வில்லை என்று நான் கூறுகிறேன். அவன் உனக்கு என்ன வேண்டும்?" இன்ஸ்பெக்டர் வினவினார்.

"எல்லாம் வேண்டும்." அவள் பதிலிறுத்தாள். உச்சந் தலையி லிருந்து உள்ளங்கால் வரை உதறலெடுத்துக் கொண்டிருந்தது. "மூன்று வருடங்களுக்கு முன்பு என்னை அவர் மணந்து கொண்டார். இல்லை. கிடையவே கிடையாது."

"சரி, உண்மையைச் சொல்லி விடு. இருதார மணம் புரிந்து கொண்டதாக அவர் மீது நாங்கள் குற்றப் பத்திரிகை தாக்கல் செய்யப் போவதில்லை."

"மூன்று வருடங்களுக்கு முன்பு எனக்கும் அவருக்கும் திரு மணம் நடந்தேறியது. என்னைப் பொறுத்த வரை, அவர் கெட்ட வரல்ல. கரீமுல்லா கானின் கனிஷ்ட புத்திரியை மணந்து காசு பறிக்க வேண்டு மென்பது வயோதிக கரீம் ஷரீபின் திட்டம்; இந்த சதி திட்டம் திருப்திகரமாக நிறை வேறுவதில் உடந்தையாகவும் உதவியாகவும் இருப்பதற்காக எனக்கு ஆயிரம் ரூபாய் கொடுப்பதாகத் தெரிவிக்கப்பட்டது. மரியமை கவனித்து வருவதற்காக கரீமுல்லா கானின்வீட்டில் நான்சமையல்காரியாக வேலைக்கு அமர்த்தப்பட்டேன். சிப்கத்துல்லாவுக்குக் கடித மெதுவும் செல்லாமல் கவனித்துக் கொள்ள வேண்டு மென எனக்குப் பணிக்கப்பட்டது. நான் அவ்வாறு செய்வது அவசிய மில்லாமற் போயிற்று; ஏனெனில் அவருக்கு அவள் கடித மெழுதுவதை நிறுத்திக் கொண்டாள். திருமண திட்டத்தை நான் விரும்ப வில்லை. ஆனால் கரீமுல்லா கானிடமிருந்து காசு பறிப் பதே பிரதான நோக்கம் என்று எனக்கு எடுத்துரைக்கப்பட்டது; அவரது வார்த்தையை நானும் நம்பிக் கொண்டேன். இன்றிரவு தான் உண்மையை உரைத்தார்; விஷயம் தெரிந்தாலும் வெளியிட மாட்டேன் என்ற நம்பிக்கையிலேயே அவர் அவ்வாறு செய்தார். ஐயோ! அவர் இறந்து விட்டார் என்பதை நான் அறிவேன். நான் என்ன செய்வேன்?"

182070

"அவன் இறக்க வில்லை. அவன் இறந்து விட்டிருந்தால் உனக்கு நான் வாழ்த்துதல்கள் தெரிவித்துக் கொண்டிருப்பேன். அவனுக்குச் சிறு காயம் தான் ஏற்பட்டிருக்கிறது."

"அவரைச் சுட்டது யார்?"

"அதைத்தான் நானும் தெரிந்து கொள்ள விரும்புகிறேன். அவனைச் சுட்டது நீ தானு?"

"நானு?" அவளது பயங்கரத் தோற்றம் அவரது கேள்விக்குத் திருப்தியான பதில் அளித்தது. "இல்லை, நான் சுடவில்லை. அவர் இங்கு இருக்கிருர் என்பதோ அல்லது இங்கு வரப்போகிருர் என்பதோ எனக்குத் தெரியாது. அவரைக் காணும் வரை அவர் ஹோட்டலில் இருக்கிருர் என்று தான் நான் நினைத்துக் கொண்டிருந்தேன். ஆனுல் இன்றிரவு இங்கு வரப்போகிருர் என்ற எண்ணம் எனக்கிருந்தது. மாலை முழுவதும் இங்கு நான் காத்துக் கொண்டிருந்தேன். கரீமுல்லாவை நான் பார்த்தேன்; ஆனுல் மறைந்து கொண்டேன்."

"கரீமுல்லா கானு? கிளப்புக்குச் சமீபமாக அவர் வந்தாரா?"

அவள் தலையசைத்தாள்.

"எனக்குத் தெரியாது. அவர் அந்த வழியே சென்று கொண்டிருந்தார். 'கிளப் இன்ஸானியத்'துக்கு அவர் செல்கிருர் என்று நினைத்தேன். இந்த வீதியில் அவர் வேறு எங்கும் செல்வதில்லை. நான் அவரை இரு தடவைகள் பார்த்தேன்."

பணியாள் மீது இன்ஸ்பெக்டர் சந்தேகப் பார்வை செலுத்தினுர்

"கரீமுல்லாகான் இங்கு வந்திருந்தாரா? சிறு காவேரி பாக்கம் சின்ன தம்பி மரைக்காயரைப் பற்றி எதுவும் தெரிய வில்லையே!"

"இல்லை, அவர் இங்கு வரவில்லை. கரீமுல்லா கானை நான் வெகு நாட்களாகப் பார்க்கவேயில்லை;" அழுத்தம் திருத்தமாகப் பணியாள் பதிலிறுத்தான். "லிப்ட் இயக்கும் சிறுவனை விசாரித்து விஷயமுணர்ந்து கொள்ளலாம். இன்றிரவு கரீமுல்லா கான் இங்கு இருந்திருந்தாரானுல் என்னை நீங்கள் தூக்கி விடலாம்."

இன்ஸ்பெக்டர் இனயத்துல்லா வெகு நேரம் ஆலோசனை செய்தார்.

"இரகசிய வழி கரீமுல்லாவுக்குத் தெரியுமா?"

"ஆம் அவருக்கு அந்த வழி தெரியும். ஆனுல் இப்போதெல்லாம் கொல்லைப்புற வழியாக அங்கத்தினரெவரும் வருவதில்லை. அவர்கள் மறைத்து ஒளிப்பதற்கு எதுவுமில்லை."

இன்ஸ்பெக்டர் அந்த அறையை விட்டு வெளியேறி நடை முற்றத்தின் வழியாக எட்டாம் எண்ணுள்ள அறைக்கு முன்பு நின்ருர். கதவுக்கு நேர் எதிரில் ஒரு ஜன்னல் இருந்தது; அது அகலத்திறக்

திருந்தது. அதற்கு அப்பால் விபத்தின் போது வெளியேறக்கூடிய வழி இருந்தது. ஜன்னல் வழியாக அந்தப் பக்கம் சென்று அந்த இரகசிய வழியை பார்த்தார். வீதி விளக்கு வெளிச்சத்தின் உதவியால் பலத்த வாயில் கதவைக் கண்டார். அந்த வாயில் கதவுக்கு அப்பால் வீதி இருந்தது. அந்த கதவு திறந்திருந்தது. காக்கி உடை தரித்த இரு போலீஸ்காரர்கள் அங்கு நின்று கொண்டிருந்தனர்; அவர்களிடமிருந்த டார்ச் விளக்கின் வெளிச்சத்தை அவரால் காண முடிந்தது. கடை முற்றத்துக்குத் திரும்பி பணியாள் ஷர்புத்தீனை நெருங்கினர்.

"விபத்து வேளைகளில் தப்பிச் செல்வதற்கான வழியைப் பயன்படுத்திக் கொண்டு எவராவது இன்றிரவு இந்த வழியே வந்திருக்கலாம்; அல்லது வராமலு மிருக்கலாம். சிப்கத்துல்லா எந்நேரத்தில் வந்தார்? முதலில் வந்தவர் யார்?"

"காதர்கான் தான் முதலில் வந்தார்; அதாவது சிப்கத்துல்லா வருவதற்கு ஐந்து நிமிடங்களுக்கு முன்பு"

"பிறகு என்ன நிகழ்ந்தது?"

"சிப்கத்துல்லாவுடன் நான் சிறிது உரையாடினேன். பக்கவழியாக அவர் சென்றார்......"

"காதர்கான் சென்ற அதே வழிதானே?"

"ஆம்" என்பதற்கு அறிகுறியாக பணியாள் தலையசைத்தான்.

"ஒரு நிமிஷ நேரம் கழித்து—உண்மையை உரைக்குமிடத்து ஒரு நிமிஷநேரம்கூட ஆயிருக்காது—கதவு படாரென தாழிடப்படும் ஓசையை நான் கேட்டேன். இந்த விஷயத்தை 'லிப்ட்' இயக்கும் ஆளுக்குத் தெரிவித்தேன்"

"பிறகு?"

"அதற்குப் பிறகு நான்கு அல்லது ஐந்து நிமிஷங்களுக்குப் பிறகு சிப்கத்துல்லா வெளியே வந்தார். பின்னர் வந்து போவதாக அவர் தெரிவித்தார்."

"போராட்டம் நடந்தது என்பதற்கு அடையாளமாக, சிப்கத்துல்லாவின் கடைகளில் ஏதாவது தென்பட்டதா?"

"இல்லை. போராட்டம் நிகழ வில்லை என்பதை என்னால் நிச்சயமாகக் கூறமுடியும்."

"நானும் அதை ஒப்புக் கொள்கிறேன். எதிர்த்துப் போராடுவதற்கான வாய்ப்பே காதர் கானுக்கு இல்லாமற் போயிற்று"

ஜீனத் ஸோபா மீது படுத்திருந்தாள். அவளது கரங்களில் அவளது தலை புதைத்திருந்தது. அவளது உடல் நடுங்கிக் கொண்டிருந்தது. அவளது அழுகைக் குரல், இன்ஸ்பெக்டரின் கவனத்தை அவள்பால் திருப்பியது.

"இன்றிரவுக்கு முன்பு எப்போதாவது அவள் இங்கு வந்திருக்கிறாளா?"

"ஆம், அவள் வந்தாள். கரீம் ஷரீபின் கட்டளைப்படி அவளை நான் விரட்டி விட்டேன்."

இன்ஸ்பெக்டர் அவரது குறிப்புப் புத்தகத்தில் சில குறிப்புகளை எழுதிக் கொண்டார்.

"ஷர்புத்தீன்! உண்மையில் நீ கைது செய்யப்பட்டிருக்கா விட்டாலும் பகிரங்கமாக நீ கைது செய்யப்பட்டவனைப்போலிருக்கிறாய். இன்றிரவு நீ கிளப்பை மூடிவிட்டு எவரையும் உள்ளே அனுமதிக்கக் கூடாது. கட்டிடத்தைக் காவல் புரிவதற்குச் சில போலீஸ்காரர்களை நான் விட்டுச் செல்கிறேன்"

"நான் கடையைக் கட்டி விடுகிறேன்" ஷர்புத்தீன் முகஸ்துதிக்குச் சொன்னான்.

"நீ கையாண்டி செய்ய வேண்டிய அவசிய மில்லை. இந்த கிளப்பை நாங்கள் மூடிவிட்டால் நீ வேலை இழந்து விடுவாய்—இப்போது அதை அவர்கள் மூடிவிடாவிடில் எப்போதுமே அதை மூடமாட்டார்கள்."

உதவி இன்ஸ்பெக்டரை அவர் அழைத்தார்.

"இன்றிரவு சிப்கத்துல்லாவுக்குப் "பொறி" வைக்க வேண்டுமென நான் அஞ்சுகிறேன். அவரை இழுத்து வருவதற்குச் சில ஆட்களை அனுப்பி வையும். நான் சென்று விஷயத்தை மரியமுக்குத் தெரிவிக்கிறேன். கரீமுல்லாகானுக்கும் விஷயத்தைச் சொல்லியாக வேண்டும்—அவருக்கு விஷயத்தைச் சொல்வது அவசிய மென்றும் நான் நினைக்கிறேன்."

(தொடரும்)


# உர்தூ ஆஸான்

தமிழ் தெரிந்தவர்கள் ஆசிரியரின்றி 20 நாட்களுக்குள் உர்தூ பாஷையை பேசவும் எழுதவும் படிக்கவும் கற்றுக் கொள்ள ஏதுவான புஸ்தகம் இது ஒன்றே. இன்றே ஒரு உர்தூ ஆஸான் புஸ்தகத்தை வாங்கி இந்தியாவின் முக்கிய பாஷையாகிய உர்துவைக் கற்றுக் கொள்ளுங்கள்.

உயர்ந்த கிளேஸ் காகிதத்தில் 256 பக்கங்களில் அச்சிட்டு அழகிய இங்கிலீஷ் கலிகோ பைண்டு செய்யப்பட்டுள்ளது.

இதன் விலை ரூ. 3-00

**ஹாஜி எம். எ. ஷாஹுல் ஹமீது அண்டு ஸன்ஸ்**
கெ. 20, ஹைரோட், திருவல்லிக்கேணி, மதராஸ் 5.

# இனாம்! இனாம்!!

## ஹமீதிய்யா முஸ்லிம் காலண்டர் 1958.

இங்கிலீஷ், தமிழ், அரபு ஆக மூன்று தேதிகளும் 3 கலர்களில் அச்சிடப்பட்டு, ஒரு மாதத்திற்கு ஒரு ஷீட்டாக 12 ஷீட்டுகள் அடங்கியுள்ளது. ஒவ்வொரு ஷீட்டிலும் தொழுகைகளின் நேரங்களாகிய அவ்காத்துஸ் ஸலாத்தும் சேர்க்கப்பட்டுள்ளது.

எங்களிடமிருந்து ஒரே நேரத்தில் எங்களது சொந்த பிரசுரங்களுள் ரூபாய் 10க்கு குறைவில்லாமல் சொந்த உபயோகத்திற்கு கிதாபு, புஸ்தகம் தருவிப்பவர்களுக்கு ஷை காலண்டர் ஒன்று (எங்களிடம் காலண்டர் ஸ்டாக் யிருக்கும் வரை) இனாமாகச் சேர்த்து அனுப்பப்படும்.

---

கிடைக்குமிடம் :—

ஹாஜி எம். எ. ஷாஹுல் ஹமீது அண்டு ஸன்ஸ்,
நெ. 20, ஹைரோட், திருவல்லிக்கேணி, மதராஸ் 5.

# மாநிலம் மறக்க முடியாத மாவீரர்

இறுதியாக, அசட்டை செய்யும் தோரணையில், எடிசன் பின் கண்டவாறு நியுயார்க்குக்குச் செய்தி அனுப்பினர்: "மற்றொரு கையால் செய்திகளை அனுப்புங்கள்."

பாஸ்டன் ஆபரேட்டர்கள் அவர்களது அடாத செயலைக் கைவிட்டனர். தவறில்லாமல் செய்திகள் முழுவதையும் எடுத்து எடிசன் எழுதிக் கொடுத்த பிரதியைப் பார்த்ததும் "வெஸ்டர்ன் யூனியன்" மேற் பார்வை அதிகாரி பின் கண்டவாறு தெரிவித்தார்: "அவரைப் போன்ற சிறந்த ஆபரேட்டரை நான் கண்டதில்லை."

பாஸ்டன் புத்தகக் கடையில் தான் மைக்கேல் பாரடேயின் நூல்கள் அனைத்தையும் எடிசன் வாங்கினர். இருபத்து நான்கு மணி நேரத்தில் நான்கு மணி நேரம் மட்டுமே தூங்கி வந்த அவர் அப் புத்தகங்கள் வாங்கிய அன்றிரவு உறக்கம் கொள்ளவேயில்லை. பொழுது விடிந்தும் கூட ஆகாரம் எதுவும் சாப்பிடாமல் பாரடேயின் நூல்களை அவர் படித்துக் கொண்டிருந்தார். அவரது அறையில் அவருடன் வசித்து வந்த சகா "நீர் சாப்பிட மாட்டீரா" என வினவினர். எடிசன் சிறிது நிமிர்ந்து பார்த்து, பின் வருமாறு அமைதியாக பதிலுரைத்தார்: "நான் இப்போது சாப்பிட மாட்டேன். நான் செய்ய வேண்டிய காரியங்கள் ஏராளமாக விருக்கின்றன. ஆனால் வாழ்வோ மிகக் குறுகியதாக விருக்கிறது."

அவரது வேலை, இரவு நேரத்தில் தந்தி மூலம் கிடைக்கும் பத்திரிகைச் செய்திகளை எடுத்து எழுதிக் கொடுக்க வேண்டும். ஆகவே, ஓய்வு நேரத்தில் – பகல் வேளைகளில் – பாஸ்டனிலுள்ள இயந்திரக் கடையில் ஆராய்ச்சிகள் நடத்த ஆரம்பித்தார். எண்ணிறந்த நோட்டுப் புத்தகங்களில் இவை குறித்து வைக்கப் பட்டன. (எடிசனின் மரணத்தின் போது, சுமார் இரண்டாயிரத்து ஐந்நூறு நோட்டுப் புத்தகங்களில் ஆராய்ச்சி சம்பந்தமான குறிப்புகள் காணப்பட்டன.)

இருபத்தோரு வயதுள்ள இளைஞராக இருந்த போது முதல் அதிகார உரிமை (Patent)க்கு அவர் மனுச் செய்து கொண்டார். சட்டசபை அங்கத்தினர் ஒவ்வொருவரும் ஒரு பித்தானை அழுத்தி அவரது ஓட்டைப்பதிவு செய்வதற்கான கருவியைக் கண்டு பிடித்து அதைச் செய்து விற்பனை செய்வதற்கான பூரண உரிமை பெற அவர் முயற்சித்தார். நேரம், உழைப்பு ஆகியவற்றை மிச்சப்படுத்த இக் கண்டு பிடிப்பு வசதி செய்த போதிலும் சுய நலத்தின் காரணமாக காங்கிரஸ் (பார்லி மெண்ட்) கமிட்டி அதற்கு ஆதரவு அளிக்க மறுத்து விட்டது.

அதே வருடம் ஒரே தந்திக் கம்பியில் ஒரே சமயத்தில் இரு செய்திகளை அனுப்புவதற்கான வழி முறையை எடிசன் கண்டு பிடித்தார். இரட்டைச் செய்தியனுப்பும் கருவி (Double Transmitter) யை அவர் செய்து முடித்தார். "வெஸ்டர்ன் யூனியன்" கம்பெனியில் வேலையைத் துறந்து விட்டு, ரோச்செஸ்டருக்கும் நியூயார்க்கிற்கு மிடையே யுள்ள தந்திக் கம்பி மார்க்கத்திலே ஏக காலத்தில் இரு செய்திகளை அனுப்பிக் காட்டுவதற்கான முயற்சியில் தம்மிடமிருந்த எல்லாப் பணத்தையும் அவர் செல விட்டார். இம் முயற்சி முழு தோல்வி அடைந்தது. இதன் காரணம் இன்னும் சரியாகப் புலப்பட வில்லை.

இம் முயற்சியால் பணம் பாழாகி விட்டமையால் இக் கண்டு பிடிப்பு சம்பந்தமாக ஏக போக உரிமைக்கு மனுச் செய்து கொள்ள அவரால் இயலாமற் போயிற்று. சிறிது காலத்துக்குப் பிறகு, இரட்டைச் செய்தி யனுப்பும் கருவியைப் பற்றித் தெரிந்து கொண்ட மற்றொருவர், பூரண உரிமைக்கு மனுச் செய்து பெற்றுக் கொண்டார். எடிசன் மனமுடைந்து போனார். இட மாற்றத்தால் அதிர்ஷ்டம் ஏற்படலாம் என்ற நம்பிக்கையுடன், பாஸ்டனிலிருந்து அவர் நியூயார்க் சென்றார்.

இரவு வேளையில் பாஸ்டனிலிருந்து படகில் புறப்பட்ட போது, பிரயாணச் செலவுக்காகக் கடன் வாங்கினர். நியூயார்க் போய் சேர்ந்த போது அவரிடம் ஒரு காசு கூட கிடையாது. பாஸ்டனில் தந்தி குமாஸ்தாவாக விருந்த ஒருவரின் ஒத்தாசையால் தங்க மார்க்கெட்டின் நீராவி உற்பத்தி செய்யப்படும் அறையில் தங்கியிருக்கலானார். சவரன் மார்க்கெட்டுக்கும் முன்னூறு தரகர் அலுவலகங்களுக்கும் தங்கத்தின் விலையைத் தெரிவித்து வந்த பிரதான செய்தி யனுப்பும் கருவிக்குப் பக்கத்தில் அவரது படுக்கை இருந்தது. அதன் அமைப்பு முறை இயங்கும் விதத்தை எடிசன் இரு தினங்களில் தெரிந்து கொண்டு, ஏதாவது அபிவிருத்தி செய்ய முடியுமா என்று ஆலோசித்துக் கொண்டிருந்தார்.

மூன்றாவது நாள் காலை வழக்கம் போல 'வேலை வேட்டை'க்குப் புறப்பட விருக்கும் சமயத்தில் தங்க மார்க்கெட்டின் கீழ் பாகத்திலே குழப்பமும் கூச்சலுமாக விருந்தது. பிரதான செய்தி யனுப்பும் கருவியில் கோளாறு ஏற்பட்டு அது இயங்குவது தடைப்பட்டிருந்தது. இதனால் தங்கம், வெள்ளி முதலிய பொருள்களின் ஆரம்ப விலை தெரியாமல் தரகர்களும் நூற்றுக்கணக்கான அலுவலகங்களும் மிகவும் கஷ்டத்துக்குள்ளாயின. வியாபாரம் ஸ்தம்பித்து விட்டது. செய்தியனுப்பும் கருவியில் என்ன கோளாறு ஏற்பட்டிருக்கிறது என்பதை அறியாமல் ஆபரேட்டர்கள் அவஸ்தைப் பட்டனர்.

அடித்தளத்துக்கு வந்து சேர்ந்த எடிசன், செய்தியனுப்பும் கருவியை ஒரு தடவை பார்த்து விட்டு, 'ஸ்ப்ரிங், உடைந்து விட்டது, என்று தெரிவித்தார்.

ஒவ்வொரு இரவும் இயந்திர அறையிலே தூங்கிக் கொண்டிருந்தவரும் அம்பட்டனின் கத்தி படாத தலை மயிரை உடையவரும் அவலட்சணமான அலங்கோலமான 'ஹாட்' அணிந்திருப்பவருமான எடிசன் கூறிய வார்த்தைகளை மானேஜரால் நம்ப முடிய வில்லை. பிரதான செய்தி யனுப்பும் கருவியில் ஏற்பட்டுள்ள கோளாறைச் சரிப்படுத்திக் காட்டு மாறு அவரை மானேஜர் அறை கூவி அழைத்தார்.

ஹாட்டை வீசி யெறிந்து விட்டு வேலையில் ஈடு பட்டார் எடிசன். இரண்டு மணி நேரத்துக்குள் அவரது வேலை முடிந்து, பிரதான செய்தி யனுப்பும் கருவியும் சுமுகமாக இயங்க ஆரம்பித்து விட்டது. ஸ்தலத்திலேயே எடிசனுக்கு வேலை கொடுக்கப்பட்டது. மாதம் முன்னூறு டாலர் சம்பளத்தில் இயந்திர மேற்பார்வையாளராக அவர் அமர்த்தப் பட்டார்.

ஆனல் சம்பளத்துக்கு வேலை செய்வதோடு எடிசன் திருப்தி அடைந்து விடுபவரா? அவரும் அவரது இரு நண்பர் களுமாகச் சேர்ந்து ஜெர்ஸி நகரில் தொழிற்சாலை ஸ்தலத்தைக் குத்தகைக்கு எடுத்துக் கொண்டு மின்சார எஞ்சினீர்களாகத் தொழில் ஆரம்பித்தனர். பங்கு மார்க்கெட்டுக்கான இயந்திரங்கள் (Tape Machines) சப்ளை செய்வதிலும் தனி நபர்களுக்குத் தந்தி வசதிகள் செய்து கொடுப்பதிலும் அவர்கள் விசேஷ நிபுணத்துவம் வாய்ந்தவர்களாக விருந்தனர். கம்பெனி ஆரம்பித்து ஆறு மாதங்கள் ஆவதற்குள் "கோல்ட் அண்ட் ஸ்டாக் டெல கிராப் கம்பெனி" யைச் சேர்ந்த ஜெனரல் மார்ஷல் லெபர்ட்ஸ் என்பவர் பதினையாயிரம் டாலருக்குக் கம்பெனியை கிரயம் வாங்க முன் வந்தார். கம்பெனி நிர்வாகம் அந்த ஜெனரலின் கைக்கு மாற்றப்பட்டது. எடிசன் மீது பிரியங்கொண்ட அவர் அன்னாரை நியூயார்க்கிலுள்ள கடையில் வேலைக்கு நியமித்தார். பங்கு மார்க்கெட்டு களுக்கான இயந்திரங்களை அபிவிருத்தி செய்வதே அவரது வேலை. சில மாதங்களுக்குள் "எடிசன் யுனிவர்ஸல் பிரிண்டர்" என்னும் இயந்திரத்தை அவர் செய்து முடித்தார். தரகர் காரியாலயங்களில் உபயோகத்தில் இருந்து வந்த தானாகவே இயங்கும் பிரிண்டர்களை விட இது சிறந்தது. மேலும் இப் பிரிண்டரை சுலபமாக இயங்கச் செய்யலாம். எனவே, இந்த இயந்திரத்தின் மீது ஜெனரல் லெபர்ட்ஸ் அதிக அக்கரை காட்டினர்.

ஒரு நாள் காலை தமது அலுவலகத்துக்கு எடிசனை அழைத்து, "இப் பிரிண்டரின் உரிமையை எனக்குக் கொடுத்து விட எவ்வளவு பணம் கேட்கிறீர்" என ஜெனரல் லெபர்ட்ஸ் வினவினர். (தொடரும்)

Edited by M. S. ABDUL KHUDUS.
Published by Hajee M. A. Shahul Hameed & Sons.
Printed at Shahul Hameedia Press, Madras.

அலி றலியல்லாஹு அன்ஹு அவர்களின்
மகனார்

# முஹம்மது ஹனீபா யுத்த சரித்திரம்

இதில் ஹஸ்ரத் முஹம்மது ஹனீபா அவர்களின் தாயாராகிய ஹனீபா பீவியுடன் அலி றலியல்லாஹு அன்ஹு அவர்கள் யுத்தஞ் செய்து ஜெயித்து, அவர்களை நிக்காஹ் செய்து விட்டுப் போனதும், பிறகு ஹஸ்ரத் முஹம்மது ஹனீபா பிறந்து தாயிடம் வளர்ந்து தமது பிதாவாகிய அலி றலியல்லாஹு அன்ஹுவைத் தேடிச் சென்று பிதா வென்று அறியாமல் யுத்தம் புரிந்ததும் பிறகு ஹஸ்ரத் முஹம்மது ஹனீபா அவர்கள் பூததேவுகளுடன் யுத்தம் புரிந்து பீவி ஸைனுல் அறபை விவாகம் செய்ததும், ஹஸ்ரத் இமாம் ஹுஸைன் றலியல்லாஹு அன்ஹு அவர்களை எஸீது என்பவன் ஷஹீது செய்து, ஹஸரத் இமாம் ஸைனுல் ஆபிதீன் அவர்களையும் ஹஸரத் சபி நாயகம் அவர்களின் வீட்டாரையும் சிறையிட்ட விஷயமாகத் தாங்கள் புறப்பட்டு போகும்போது உமர் அலி, தாலிப் அலி, ஆகில் அலி, முஸிப்காகான், இப்ருஹீம் உஷ்த்து, தோஹான் மோஹான் முதலிய பிரக்யாதி பெற்ற வீரர்களோடு மதீனமா நகரஞ் சென்று உத்பா வலீது என்பவர்களுடனும், மர்வானுடனும் எஸீதுடனும் பல ஊர்களில் பலவிதமாய் மகா வீரியத்துடன் அதிசயிக்கத்தக்க விதமாய் யுத்தஞ் செய்து எஸீதுடைய படைகளை முறிய அடித்தும் ஜெயித்தும், மர்வானுடைய மூக்கையும் காதையும் அறுத்தும் ஹுஸைன் றலியல்லாஹு அன்ஹுடைய பழிக்கு பதில் பழி வாங்கி சிறையை மீட்டியதும், ஹஸரத் ஸைனுல் ஆபிதீன் அவர்களைப் பட்டத்தில் உட்கார வைத்ததும், எல்லா அரசாங்கத்தையும் தங்களுக்குள்ளடக்கி ஆண்டது மான எல்லா விஷயங்களும் மிக அருமையாயும் தெளிவாயும், எழுதப்பட்டிருக்கிறது.

புதிய பதிப்பு கலிகோ பைண்டு விலை ரூ. 3-00

---

கிடைக்குமிடம்:—

**ஹாஜி எம். எ. ஷாஹுல் ஹமீது அண்டு ஸன்ஸ்,**

நெ. 20, ஹைரோட், திருவல்லிக்கேணி, மதராஸ், 5.

வெளிவந்து விட்டது! வெளிவந்து விட்டது!!

# 1958-வது வருஷத்தின்

## ஹமீதிய்யா முஸ்லிம் காலண்டர்

இதில் இங்கிலீஷ், தமிழ், அரபு ஆக மூன்று தேதிகளும் 3 கலர்களில் அச்சிடப்பட்டு ஒரு மாதத்திற்கு ஒரு ஷீட்டாக 12 ஷீட்டுகள் அடங்கியுள்ளன. ஒவ்வொரு ஷீட்டிலும் தொழுகைகளின் நேரங்களாகிய அவ்காதுவ்ஸலாத்தும் சேர்க்கப்பட்டுள்ளது. சொற்ப காலண்டர்களே அச்சிட்டு வருவதால் இவை விரைவில் செலவாகி விடுவது சகஜம். ஆதலால் தங்களுக்குத் தேவையுள்ள காலண்டர்களுக்கு உடனே ஆடர் செய்து பெற்றுக் கொள்ளுமாறு கேட்டுக் கொள்கிறோம்.

ஒரு காலண்டர் விலை நயா பைசா. 75

நூறு காலண்டர்கள் விலை ரூ. 60–00

---

கிடைக்குமிடம்:—

ஹாஜி எம். எ. ஷாஹுல் ஹமீது அண்டு ஸன்ஸ்

நெ. 20, ஹைரோட், திருவல்லிக்கேணி, மதறாஸ் 5.